Not for sale

மே - ஜூன் 2012

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## ஆரோக்கியமான கிரியைகள்

புசிப்பும், குடிப்பும் • தேவனோடு நடப்பது • இளைப்பாறுதல்

கற்றுக்கொள்ளுதல் • மகிழ்ச்சி • ஸ்நானம் • சூரிய ஒளி

நம்முடைய ஐம்புலன்களையும் பயிற்றுவித்தல்

ஆரோக்கியமான கிரியைகள்

# ஆதியிலே



1908-ம் வருடம், செப்டம்பர் 3-ம் தேதி, ஆவிக்குரிய தேர்ச்சி அல்லது "ஆவிக்குரிய வளர்ச்சி" என்ற ஒரு பிரசங்கத்தை ஹென்ரி க்லே ராக்வெல் என்ற சகோதரர், ஓஹியோ வேத மாணவர்களின் மாநாட்டில் பேசினார். மறுபதிப்புகளில், 4245-ம் பக்கத்தில் ஒரு சுருக்கமான விளக்கத்தைக் காணலாம். 1908 மாநாட்டு அறிக்கையில் ஒரு கட்டுரை காணப்பட்டது.

பாஸ்டர் ரசல் மரித்த 1916-ம் வருடத்தில், ராக் வெல் பத்திரிகை ஆசிரியர் குழுவின் அங்கத்தினராக இருந்தார். ஆனால் 1917-ம் வருடம், அந்த குழுவிலிருந்து அவர் விலகினார். அதற்குபின் 1918-ம் வருடம் இந்த ஸ்தாபனத்தின் அடிப்படை இயக்குனராகவும், ஹெரால்டு பத்திரிகை குழுவின் உறுப்பினரில் ஒருவராகவும் இருந்தார்.

1908-ம் வருடம் அவர் பிரசங்கித்த பிரசங்கம், இந்த பிரதிக்கு உணர்ச்சியூட்டுகிறது. நம்முடைய உடல் ரீதியான ஆரோக்கியத்தை பராமரிப்பதைப் போல, ஆவிக்குரிய உடல் நலத்திற்கு தேவையான அநேக காரியங்களை நாம் செய்யலாம். நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்தைப் பெறக்கூடிய காரியங்களைக் குறித்து "புசிப்பும் குடிப்பும்" என்ற கட்டுரை விவரிக்கிறது.

நாம் தேவனை பின்பற்றக்கூடிய காரியங்களில், "நடக்கை" என்ற வினைச்சொல் வேதாகமத்தில் மிகச் சரளமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை "தேவனோடு நடப்பது" என்ற கட்டுரை காட்டுகிறது. உடன்படிக்கை செய்த கிறிஸ்தவர்கள் ஜீவனுக்குரிய இடுக்கமான வழியில் நடந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய இராஜ்யத்தில், இந்த மனுக்குலம் பெரும்பாதையில் நடப்பார்கள்.

உடல் ரீதியான செயல்பாடுகள், ஆரோக்கியத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தாலும், "ஓய்வும்" மிக அவசியமாக இருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் இது மிகவும் அவசியமானது. எபிரேயரில் கூறப்பட்டது போல இதுவரைக்கும் அனுபவித்திராத ஒரு ஓய்வை தேவ ஜனங்களும், பழைய ஏற்பாட்டின் இஸ்ரயேலர்களும் பெறுவார்கள்.

சரீரத்திற்கு பயிற்சி தேவைப்படுகிறது போல, மூளைக்கு "கற்றுக்கொள்ளுதல்" மிக அவசியமானது. தேவனைப் பற்றி கற்றுக்கொள்வதற்கு நாம் கிறிஸ்துவின் பள்ளியில் பயின்று கொண்டிருக்கிறோம்.

"மகிழ்ச்சி" ஒரு விருப்பமாக எண்ணப்படுவதில்லை. ஆயினும், நமக்குள் இருக்கும் மன அழுத்தம் ஆரோக்கியத்தைக் கெடுப்பதுபோல, மனமகிழ்ச்சி நம்மை அப்படிப்பட்ட மனநிலையிலிருந்து விடுவிக்கும்.

பாவத்திலிருந்து தொடர்ந்து கழுவப்படுவதன் முக்கியத்துவத்தை குறித்து, "ஸ்நானம்" என்ற கட்டுரை விவரிக்கிறது. முதலில் பாவம் இன்னதென்று உணர்ந்து கொள்வதற்கு அவசியம் ஏற்படுகிறது. எடுத்துகாட்டாக, தாவீதின் வாழ்க்கையில் நடந்த ஓர் சம்பவம் நமக்கு கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பிதாவும், இயேசுவும், சூரியனைப் போலிருப்பதை "சூரிய வெளிச்சம்" என்ற கட்டுரை விவரிக்கிறது. மேலும், அவர்களை போல மாறுவதே, நம்முடைய நோக்கமாகவும் இருக்கவேண்டும்.

கிறிஸ்துவுக்குள் குழந்தையாக இருக்கும் நாம், நம்முடைய ஐம்புலன்கள், முழுமையாக வளர்ச்சி அடையக்கூடிய சிந்தையைக் குறித்து "நம்முடைய ஐம்புலன்களை பயிற்றுவிப்பது" என்ற கட்டுரையை தியானிப்பதோடு இந்த பிரதி முடிவடைகிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு தேவையான சகல காரியங்களையும் தொடர்ந்து செய்வோமாக.

**மே- ஜூன் 2012**


**ஆதியிலே** (ஆரோக்கியமான கிரியைகள்) . . . 1

**புசிப்பும் குடிப்பும்.** . . . . 2

தேவனுடைய வார்த்தைகளை "புசியுங்கள், சத்தியத்தின் "தண்ணீரை" குடியுங்கள்

**தேவனோடு நடப்பது** 7

நெருக்கமான பாதையில் கவனத்தோடும் எச்சரிப்போடும் நடவுங்கள்

**இளைப்பாறுதல்** 11

ஓய்வு நாள், மற்றும் ஓர் முக்கியமான இளைபாறுதல்

**கற்றுக்கொள்ளுதல்** 15

நம்முடைய வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவின் பள்ளியில் பயின்றுகொண்டிருக்கிறோம்.

**மகிழ்ச்சி** 18

நம்முடைய மனதை சந்தோஷிப்பிக்க அநேக காரியங்கள் உண்டு.

**ஸ்நானம்** 22

நாம் தவறு செய்யும்போது சுத்திகரிக்கப்படுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது.

**சூரிய ஒளி** 26

பிதாவும் இயேசுவும், ஜீவனுக்கும் ஒளிக்கும் ஊற்றும் காரணர்களாக இருக்கிறார்கள்.

**நம்முடைய ஐம்புலன்களையும் பயிற்றுவித்தல் . . .** 28

ஆவிக்குரிய புலன்கள் வளர்ச்சி அடைவதற்கு தேவைப்படும் பயிற்சிகள்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 31

**இஸ்ரயேலின் வளர்ச்சி** 33



நீங்கள் எதை புசிக்கிறீர்களோ, நீங்கள் அதுவாக இருக்கிறீர்கள்

# புசிப்பும், குடிப்பும்

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். மத்தேயு 5:6

**Micheal Nekora**

சகல காரியங்களையும் சரியாக செய்வதற்கு ஆரோக்கியமான உடல் நலன் தேவைப்படுகிறது. இதற்கு நல்ல முறைகளில் புசித்து குடிக்க வேண்டும். "நீங்கள் என்ன புசிக்கிறீர்கள் என்று எனக்கு சொல்லுங்கள், நீங்கள் யார் என்பதை சொல்லுவேன்" என்று 1826-ம் வருடம் பிரிலெட் - சாவாரின் எழுதினார். ஒருவர் உண்ணும் உணவின் அடிப்படையில், அவருடைய மனநிலையிலும், உடல் நலனிலும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்று அவருடைய பாணியில் கூறுகிறார்.

வாகனங்களுக்கு எரிபொருள் தேவைப்படுகிறது போல நாம் சுறுசுறுப்பாக செயலாற்ற உணவு தேவைப்படுகிறது. உணவு உட்கொள்வதை குறைத்தால், சரீரத்தின் ஆற்றல் குறைந்துவிடும். உடனடியாக மரணம் ஏற்படும் என்று பொருளல்ல. ஆரோக்கியமான ஒரு வாலிபன் ஐந்து முதல் ஆறு வாரங்கள் உணவின்று உயிரோடு ஜீவிக்கலாம்.

ஆனால் அனைத்து உணவும் ஒரே சீராக இருப்பதில்லை. ஒரு பாட்டில் சோடாவிலும், ஒரு பாட்டில் பழசாறிலும் ஒரே அளவிலான கலோரிகள் காணப்பட்டாலும், அவைகளில் உள்ள சத்துப்பொருட்கள் வேறுபடுகிறது. ஆகவே எந்த அளவுக்கு ஒருவர் தன்னுடைய உணவை தேர்வு செய்து புசிப்பாரோ, அந்த அளவுக்கு அவர் ஆரோக்கியம் அடைவார்.

**ஆவிக்குரிய உணவு**

ஆவிக்குரிய புது சிருஷ்டிகளுக்கும் உணவு உண்டு. "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது;" (எரே15:16) என்று எரேமியா எழுதினார். தேவனுடைய வார்த்தைகளை உட்கொண்டதினால் மிகுந்த சந்தோஷத்தை அனுபவித்ததாகக் கூறுகிறார். சில உணவு, கண்களுக்கு கவர்ச்சியாக இருந்தபோதிலும் அதில் எந்த ஊட்டச்சத்தும் இராதது போல மற்ற புத்தகங்களில் உள்ள வார்த்தைகள், நம்மை ஈர்த்தாலும் புது சிருஷ்டியின் வளர்ச்சிக்குண்டான காரியங்கள் எதுவும் இருப்பதில்லை, ஆகவே தேவனுடைய வார்த்தைகளால் மட்டுமே நம்முடைய ஆத்துமா மகிழும்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு "சிறிய புஸ்தகத்தை" வாங்கி புசிக்கும்படி யோவானுக்கு சொல்லப்பட்டது. "நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்; என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருந்தது; நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று." (வெளி 10:10). சகோதரர் சார்லஸ் ரசல் தன்னுடைய வேதாகம விளக்க உரையில் இதை குறித்து விவரித்திருக்கிறார். (1852-1916) -

"மிகாயேலின் இராஜ்யத்தைக் குறித்த காரியங்கள், 1829-லிருந்து பொறுமையாக துவங்கப்பட்டதென்று, வெளிப்படுத்தின புஸ்தகத்தில் அடையாளமாக சொல்லப்படும் சிறிய புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "யோவானை" அடையாளப்படுத்தும், புத்தியுள்ள தேவ ஜனங்கள், இதை புசிக்கும் படி கட்டளைப் பெறுகிறார்கள். இந்த சத்தியத்தைப் பெற்றுக்கொள்கிறவர்கள் யோவானின் அனுபவத்தை பெற்றுக்கொள்கிறார்கள். இது அற்புதமான இனிப்பைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அதின் செயல்முறைகள், மிகக் கசப்பான உபத்திரவங்களுக்குள்ளாக வழி நடத்துகிறது. (Studies in the Scriptures, Volume 3, page 89)

தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலும் இதே அனுபவத்தை பெற்றிருந்தார். ஆனால் வயிற்றுக்குள் அது கசப்பாக மாறவில்லை. "பின்பு அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ காண்கிறதைப் புசி; ...இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் அவர்களோடே பேசு என்றார். ...அப்பொழுது நான் அதைப் புசித்தேன்; அது என் வாய்க்குத் தேனைப்போல் தித்திப்பாயிருந்தது. " (எசே 3:1-3). "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். " (சங் 119:103) எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை நன்கு தியானித்து, அவைகளை உட்கொண்டு, மற்றவர்களிடம் புரியும்படி அவைகளை அறிவிப்பதே

இதன் பொருளாகும். அதே போல தேவனுடைய வழிநடத்துதலை தேடுபவர்கள், வசனங்களில் எழுதப்பட்ட வார்த்தைகளை ஆழமாக தியானித்து, ஜீரணித்து மற்றவர்களுக்கும் அறிவிக்க வேண்டும்.

எபிரெயரின் புத்தகத்தில், உணவு - போதகத்திற்கு ஒப்பிட்டு பேசப்படுகிறது - "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்." (எபி 5:12,13) அதேபோல " நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை."(1கொரி 3:2) என்று கொரிந்தியருக்கு எழுதின நிரூபத்தில் பவுலும் குறிப்பிடுகிறார்.

பாலை பொருத்தவரைக்கும் எந்த தவறும் இல்லை, ஏனெனில் பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை தேவன் இஸ்ரயேலர்களுக்கு வாக்களித்தார். (யாத் 3:8) பால் ஒரு அற்புதமான உணவாக இருந்தாலும், உடம்பிற்கு தேவையான இரும்பு சத்தையும், வைட்டமின் சத்தையும் அது கொடுப்பதில்லை. குறைவான நிலையை வெளிப்படுத்துவதற்கு "பால்" என்ற வார்த்தையை பயன்படுத்தினார். கொரிந்தியர்கள் ஆவிக்குரிய குழந்தைகளாக இருந்தபடியால் எளிமையான சத்தியத்தைக் காட்டிலும் மேலான காரியங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

தேவனுடைய வார்த்தைகளை உட்கொள்வதற்கு மட்டுமல்ல, தேவனுடைய வாயின் வார்த்தையானவரையும் உட்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது."அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (யோவ 6:53) ஆனால் நோவா பேழையை விட்டு வெளியே வந்தபோது -"நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்ததுபோல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன். மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்." (ஆதி 9:3,4) என்று தேவன் சொன்ன வார்த்தைகள் இதற்கு முரண்பாடாகத் தோன்றுகிறது. அதற்கு பின்பு குறிப்பாக இரத்தத்தை புசிக்கக்கூடாது என்ற கட்டளை தேவனால் கொடுக்கப்பட்டது. "உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் யாதொரு பறவையின் இரத்தத்தையாவது, யாதொரு மிருகத்தின் இரத்தத்தையாவது புசிக்கலாகாது. எவ்வித இரத்தத்தையாகிலும் புசிக்கிற எவனும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்று சொல் என்றார்." (லேவி 7:26, 27) ஆகவே."அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப்போனார்கள். " (யோவா 6:66) என்பதை குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டாம்.

அங்கிருந்த சீஷர்கள் உண்மையில் ஆர்வமுள்ளவர்களாக இருந்திருந்தால் இதன் உண்மையான பொருள் என்ன என்பதை அவர்கள் இயேசுவிடம் கேட்டிருப்பார்கள். நிச்சயமாக இயேசுவும் இதற்கான பதிலை விவரித்திருப்பார். "நீங்கள் மிருகத்தின் இரத்தத்தைப் புசித்தால் மிருகத்தில் இருக்கும் ஜீவன் உங்களுக்குள் நுழைந்துவிடும் அல்லவா" என்று தேவன் நோவாவிடம் கூறினார். இப்பொழுது "என்னுடைய இரத்தத்தை, பானம் பண்ணுங்கள் என்னுடைய ஜீவன் உங்களுக்குள் வாசமாயிருக்கும்" என்று இயேசு கூறினார். அவருடைய ஜீவனும், மரணமும் மட்டுமே விலையுயர்ந்ததாக இருக்கவில்லை. அவர் நமக்கு தொடர்ந்து ஜீவனைக் கொடுக்கக்கூடிய ஜீவ ஊற்றாயிருக்கிறார். (யோவ 6:48-51, 53-58)

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன் ஒரு வித்தியாசமான உருவகத்தை பயன்படுத்தினார். "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. " (யோவ 15:5) சரீரத்திற்குரிய ஜீவன் இரத்த ஓட்டத்தினால் உயிர்பெறுவதைப் போல, கிளைகள் செடியிலிருந்து ஜீவனைப் பெறுவதைப்போல இயேசு கிறிஸ்துவின் தொடர்ச்சியான ஊட்டச் சத்தினால் மட்டுமே நம்முடைய ஆவிக்குரிய ஜீவனை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

**உபவாசம்**

நல்ல ஆரோக்கியத்திற்கு சரியான முறையில் உணவு உண்பது மிக அவசியம். அதே நேரத்தில் உணவு புசியாமல் இருப்பது அல்லது உபவாசிப்பதைக் குறித்து ஏதாகிலும் கூறலாமா?

மேற்கத்திய மருத்துவத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட ஒருவர் (கி.மு.) - " நம்முடைய உணவு நம்முடைய மருந்தாக இருக்க வேண்டும். நம்முடைய மருந்து நம்முடைய உணவாக இருக்கவேண்டும் " உடல் நல குறைவில் நீங்கள் புசிக்கக்கூடிய ஆகாரம் உங்கள் வியாதியை நீக்கும்" என்று கூறினார். முழுமையான உபவாசத்தின் அனுபவத்தை பெறாமல், ஒருவரையும் அவர் தன்னுடைய மாணவனாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. சரீரத்தில் சேமிக்கப்பட்டுள்ள நச்சுப் பொருட்களை உபவாசத்தின் மூலம் வெளியேற்றலாம் என்று பல நிரூபணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு குறுகிய காலத்திற்கு உபவாசம் இருப்பதை யூதர்கள் உட்பட அநேக மதங்களும் பழக்கத்தில் கொண்டுள்ளது. "ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும்; இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது. " (லேவி 16:29) என்று ஜனங்களுக்கு கற்பிக்கப்பட்டது. "ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவது" என்ற சொற்றொடர் உபவாசத்தை பொருட்படுத்துகிறது. (சங் 35:13, 69:10, ஏசா 58 :3) வெளிப்புறமான தாழ்மையை காட்டுவதற்கு இது ஒரு அடையாளமாக இருந்தது. சில நேரங்களில் மற்றவர்களின் அனுதாபத்தைப் பெறுவதற்கு இவைகள் செய்யப்பட்டது.

பரிசேயர் மற்றும் ஆயக்காரனைப் பற்றி சொல்லிய உவமையில் (லூக் 18:9-14), "பரிசேயன் நின்று: தேவனே!....வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்;... " மற்றவர்களைக் காட்டிலும் அவன் சிறந்தவன் என்பதை எடுத்துரைத்தான். ஒருவன் உபவாசிக்க விரும்பினால், அதை பகிரங்கமாக செய்யவேண்டாம் என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். "நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்;... நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு."(மத் 6:6-18)

பொதுவாக சொல்லப் போனால், இயேசுவின் சீஷர்கள் உபவாசிக்கவில்லை என்று தோன்றுகிறது. இதைக் குறித்து யோவான் ஸ்நானகனின் சீஷர்கள் கேள்வி எழுப்பினார்கள் (மத் 9:14) இதற்கு இயேசு பதிலளித்தாலும், அவர்கள் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை.

உடல் நலத்திற்காகவோ, ஆவிக்குரிய நலனுக்காகவோ ஒருவர் உபவாசிப்பது அவரவருடைய தனிப்பட்ட விருப்பமாக இருக்கிறது. கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கக்கூடியவர்கள் உபவாசிக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் எங்கும் சொல்லப்படவில்லை.

**தாகம்**

"தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம்."(நீதி 25:25) என்று ஞானி எழுதினார். தண்ணீரைத் தவிர வேறு எந்த பானமும் ஒருவருடைய தாகத்தைத் தீர்க்க முடியாது. ஒருமுறை தாவீது பெலிஸ்தியர்களுடன் யுத்தம் செய்கையில், பெத்லகேம் பட்டணத்தின் வாசல் அருகே இருக்கும் தண்ணீரைக் குடிப்பதற்கு எவ்வளவு இன்பமாய் இருக்கும் என்று அவர் கூறினார். இதைக் கேட்ட அவருடைய மூன்று தளபதிகளும் தாவீதை பாதுகாப்பாக கூடாரத்தில் விட்டுவிட்டு, தங்களுடைய உயிரைப் பணையம் வைத்து, பட்டணத்து வாசலிலிருக்கும் தண்ணீரை தாவீதுக்கு கொண்டு வந்தார்கள். தங்களுடைய உயிரை பணையம் வைத்து, தனக்காக அந்தத் தண்ணீரை கொண்டு வந்ததை எண்ணி அதிர்ச்சியடைந்த தாவீது, அந்த தண்ணீரை குடிக்க மறுத்தார். தன்னுடைய தளபதிகளின் ஜீவனுக்கு ஒப்பான அந்த தண்ணீரை கர்த்தருக்கு பானபலியாக வார்த்தார். (11சாமு 23:15-17)

தண்ணீர் இன்றி, ஒருவரும் ஜீவிக்க இயலாது. உணவு இல்லாமல் பல வாரங்கள் வாழ்ந்தாலும் தண்ணீர் இல்லாமல் சில நாட்கள் மட்டுமே வாழ முடியும். உலகத்தின் மிகப் பெரிய பட்டணங்கள் நதிக்கரையில் அமைக்கப்பட்டது. நதிகள் மாசுப்படுவதற்கு முன் ஜனங்களில் ஏராளமான தேவைகளை அது சந்தித்தது.

பல காலங்களில் வாழ்ந்த ஜனங்களின் கதை இன்றைய தினங்களில் அதிகமாகப் பாராட்டப்படுகிறது. பொதுவாக இளைஞர்கள் மின்சாரத்தை ஒரு வரப்பிரசாதம் என்று கூறுகிறார்கள். ஆனால் நூறு வயது சென்ற மூதாட்டி - " நான் பள்ளங்களில் இறங்கி தண்ணீர் பிடிக்காமல், எளிதில் தண்ணீர் கிடைப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்." என்று சொல்லுவார்.

சமாரியாவின் கிணத்தண்டையில் இயேசு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, தண்ணீர் மொள்ள வந்த ஸ்தீரியிடம் பேசினார். அவர், அவளிடம்

தண்ணீர் கேட்ட போது யூதர்கள் சமாரியர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளாததை எண்ணி அவள் ஆச்சரியம் அடைந்தாள். அதற்குபின் அவர் கொடுக்கும் தண்ணீரைக் குறித்து பேசினார். "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள். " (யோவா 4:13-15) இந்த வசனப்பகுதியைப் பற்றி ஜேமீசன் மற்றும் பாசெட்டு மற்றும் பிரௌன் கூறுவது என்னவெனில் - " இங்கு கொடுக்கப்படும் வித்தியாசம் அடிப்படையானது. பூமியில் அழியக்கூடிய நிலையில் இருக்கும் அனைவரும் இந்த தண்ணீரால் திருப்தி அடைகிறார்கள் என்று தெளிவாகப் பொருள்படுகிறது. நாம் பருகக்கூடிய தண்ணீர் வெகு சீக்கிரத்தில் தீர்ந்து விடுகிறது. ஆனால் கிறிஸ்து கொடுக்கும் தண்ணீர், நமக்கு ஆவிக்குரிய ஜீவனைத் தருகிறது. நமக்குள் இது ஆழமாக ஊற்றப்பட்டு அவைகளை தக்க வைத்துக்கொள்ளவது மட்டுமல்ல, எப்பொழுதும் புது ஜீவனோடு பொங்கி எழக்கூடிய ஜீவ ஊற்று நமக்குள் தோன்ற வேண்டும். கிறிஸ்துவின் ஆவி நமக்குள் வாசமாயிருப்பதே நம்முடைய ஜீவனின் இரகசியமாயிருக்கிறது. ஆகவே, நமக்கு என்றும் தாகம் எடுப்பதில்லை - கிறிஸ்துவின் ஆவியினால் நாம் சகலத்திலும் திருப்தி அடைந்துவிடுவோம்."

அந்த வருஷத்தின் கடைசி பண்டிகையின் நாளன்று "ஜீவ தண்ணீர் உள்ள நதிகள் " என்ற சொற்றொடரை, தம்மில் உள்ள சத்தியத்திற்கு உருவகமாக ஒப்பிட்டுப் பேசினார். "பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். "(யோவ 7:37,38)

ஆனால் பழைய ஏற்பாட்டில் விசுவாசிகளிடமிருந்து ஜீவ நதிகள் ஓடும் என்று வாசித்திருக்கிறோமா ? நிச்சயமாக இல்லை. இயேசுவிடமிருந்து மட்டுமே ஜீவ தண்ணீர் வரும் என்று கம்பானியன் (companion Bible) வேதாகமம் கூறுகிறது. விசுவாசிகளிடமிருந்து ஜீவ தண்ணீர் புறப்படும் என்பதற்கான எந்த விதமான ஆதாரத்தையும் கிரேக்கில் உள்ள மூலப்பிரதியில் காணப்படுவதில்லை. "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் (மெசியா) உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். " ஆகையால் ஆங்கில வேதாகமத்தில் தவறான குறிப்பீடுகள் இடப்பட்டிருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. "அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும். "(சகரி 13:1) இயேசுவே அந்த ஒரே ஜீவ ஊற்றாக இருக்கிறார். நாம் நித்தியமாக ஜீவனை பெறுவதற்கு, அவரிடமிருந்து வரும் ஜீவ தண்ணீரை பருகி, தேவனுடைய பரிசுத்த ஆவியை நாம் பெற வேண்டும். (யோவ 10:10)

**பகைவர்களை நண்பர்களாக மாற்றுவது**

ரோமர்களுக்கு எழுதின நிருபத்தில் பவுல், நீதிமொழிகள் 25:21 -22 வசனங்களைக் குறிப்பிட்டு எழுதினார். "அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்."(ரோம 12:20). அக்கினியின் தழல் என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே காணப்படுகிறது. நமக்கு எதிராக தீமை செய்பவர்களை நண்பர்களாக மாற்றிக்கொள்வதற்கு புசிக்க உணவும் , குடிக்க தண்ணீரும் கொடுத்தால் (கிருபை பொருந்திய வார்த்தைகளும் கிரியைகளும்) அவர்களை நமக்கு நண்பர்களாய் மாற்றிக்கொள்ளலாம் என்று இந்த வசனத்தை நாம் புரிந்து கொள்ளுகிறோம். ஆனால் அதற்குப் பின் சொல்லப்பட்ட வசனம் நம்மை குழப்பத்திற்குள்ளாக்குகிறது. ஏனெனில், சொல்லர்த்தமான அக்கினி தழலை ஒருவருடைய தலையின் மேல் குவித்தால், நண்பர்களையும் பகைவர்களாக மாற்றுமே. ஆயினும் . நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. (ரோமர் 12:21) என்ற அடுத்த வசனத்தின் பொருளொடு இசைந்திருக்கவெண்டும்.

கென்னத் சாமுயேல் (1893-1962) ,( New American Standard Bible )என்ற வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்களில் ஒருவரும், கிரேக்க வல்லுநராகவும் இருந்தார். இந்த

வசனப்பகுதிக்குரிய அவருடைய விளக்கத்தை காண்போம். "வேதாகம காலங்களில் சமைப்பதற்கும், வீட்டை சூடாக வைத்துக் கொள்வதற்கும் அக்கினி தழல் வீடுகளில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கும். ஒரு வேளை அது அணைந்து விட்டால், பக்கத்து வீட்டிற்கு சென்று அக்கினி தழலை பெற்றுக்கொள்வார்கள். இந்த அக்கினித் தழலை ஒரு பாத்திரத்தில் வைத்து அதை தலையில் சுமந்து கொண்டு வருவார்கள். இப்படியாக மற்றவருக்கு அக்கினி தழலை கொடுக்கக்கூடிய மனுஷன் தன்னுடைய மிகுந்த இரக்கத்தையும் அன்பையும் வெளிப்படுத்துவராக இருக்கிறார். அக்கினி தழல் தேவைப்படுகிறவர்களுக்கு தன்னுடைய வீட்டிலிருந்து எடுத்துக் கொடுக்கிறார். அந்த பாத்திரத்தில் குவியலாக அக்கினித் தழலை குவித்துக் கொடுத்தால், அவர் தன்னுடைய வீட்டிற்கு செல்லும் வரைக்கும் கொஞ்சம் அக்கினி தழலாவது எரிந்து கொண்டிருக்கும். இப்படியாக காயப்படுத்தின ஒருவருக்கு காயத்திற்கு பதிலாக அன்பை திரும்ப காண்பிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

ஆதாம் கிளார்க் (1762 -1832) இந்த சொற்றொடரை வேறு விதத்தில் கண்ணோக்கினார்.

"இந்த வசனத்திலுள்ள பின் பகுதியில் - அவன் தலையில் அக்கினி தழலை குவிப்பாய் என்ற சொற்றொடர், உருகக்கூடிய உலோகங்களுக்கு ஒப்பிட்டு சொல்லக்கூடிய ஒரு உருவகமாய் இருக்கிறது. உலோகங்களின் கலவை அக்கினிக்குள் வைக்கப்படும்போது அதில் உள்ள அழுக்கும் தூசியும் எரிந்துவிடும். அதற்குப் பின் சுத்தமான உலோகம் அந்த பாத்திரத்தின் கீழ் தங்கிவிடும்.

"ஒருவர் தலையின் மேல் அக்கினித் தழலை குவிப்பது, அவருக்கு தீமை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. மாறாக, அவருக்கு முழுமையான நன்மைகளை கொடுப்பதே முக்கிய நோக்கமாய் இருக்கிறது. "

### புசிக்கக்கூடிய பொதுவான செயல்பாடுகள்

நம்முடைய ஜீவனை தக்கவைத்துக் கொள்வதற்கு உணவு புசிப்பது மிக அவசியமாய் இருந்தாலும் நம்முடைய பொது நல செயல்பாடுகளிலும் உணவு புசிப்பது, ஒரு முக்கிய பங்கை பெறுகிறது. வாரத்தின் முதல் நாளிலே சீஷர்கள் அப்பம் பிட்கிறதற்கும் தங்களுடைய இருதயத்தில் உள்ளவைகளை பகிர்ந்து கொள்வதற்கும் கூடி வந்தார்கள். (அப் 20:7) அவர்கள் தங்களுடைய வீட்டில் அப்பம் புசித்து விட்டு, அதற்குபின் ஒன்றாக இணைந்து காரியங்களை சம்பாஷித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை. இந்த பூமியில் இயேசு தன்னுடைய கடைசி போஜனத்தை நெருங்கிய சீஷர்களோடு புசித்தார். அப்பொழுது இந்த ரசத்தை வருங்காலத்தில் இவர்களோடு கூட தேவனுடைய இராஜ்யத்தில் மகிழ்ச்சியாய் புசிக்கப் போவதாகக் கூறினார். (மத் 26:29)

இயேசு தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்து பேசும்பொழுது அவர் தம்மை பந்தி பரிமாறுகிறவராகக் குறிப்பிட்டார்."எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன். " (லூக் 12:37) கிறிஸ்துவின் வருகைக்குபின் அவர் பரிமாறக் கூடிய சத்தியங்களை,அவருடைய ஊழியக்காரர்கள் ஒருமித்து கூடி பகிர்ந்து கொள்வதை மிக அழகாக சித்தரிக்கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்." (யோவா 17:17) நீதியின் மேல் அல்லது சத்தியத்தின் மேல் பசிதாகம் உள்ள அனைவரும் இந்த பந்தி போஜனத்தில் திருப்தி அடையும்படி அழைக்கப்படுகிறார்கள். (மத் 5:6)

காலப்போக்கில் தேவனுடைய இராஜ்யத்தில் இந்த உலகம் முழுவதற்கும் மிகப் பெரிய விருந்து பரிமாறப்படும். "சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும். ....இந்த மலையிலே அகற்றிப்போடுவார். அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து,....கர்த்தரே இதைச் சொன்னார்."( ஏசா 25:6-8)

இப்பொழுது கர்த்தருடைய மேஜையில் புசித்து குடிப்பவர்கள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மேலும் தேவனுடைய இராஜ்யத்தை விரும்பக்கூடிய அனைவரும் இலவசமாய் ஜீவ தண்ணீரை பெற்றுக் கொள்வார்கள் என்பதை விசுவாசத்தினால் காணக்கூடியவர்கள் எவ்வளவு பாக்கியமுள்ளவர்கள். (வெளி 22:17)

இடுக்கமான வழியில் பிரவேசித்தல்



# தேவனோடு சஞ்சரித்தல்

"அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் **நடந்தபடியே** தானும் நடக்கவேண்டும். " (1யோவா 2:6)

ஒரு காலத்தில் தங்களுடைய வாழ்க்கையின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஜனங்கள் அதிகமான நேரத்தை செலவழித்தார்கள். மற்ற காரியங்களை செய்வதற்கு நேரம் கிடைக்கவில்லை. "ஒவ்வொரு தனி நபருக்கும் சரியான அளவைக் கொண்ட ஊட்டச்சத்தையும், உடலுக்கு தேவையான பயிற்சியும் கொடுத்தால், நிச்சயமாக ஆரோக்கியமான உடல் நிலையை அனைவரும் பெறலாம்." என்று ஒரு அறிஞர் கி.மு. 400-ம் வருடத்தில் கூறினார்.

18-ம் நூற்றாண்டில் தொழில் நுட்ப யுகத்திற்கு முன், உடல் ரீதியான பயிற்சிகள் துவங்கப்பட்டது. அப்பொழுது, இந்த புதிய தொழில் நுட்பங்கள் மனுஷர் செய்யும் வேலைகளை குறைத்து, அவர்களுக்கு விடுதலை அளித்தது. மில்லியன் கணக்கான ஜனங்கள் விவசாயத்தை விட்டுவிட்டு பட்டணத்திற்கு சென்றனர். வாழ்க்கையின் தரம் பல வழிகளில் உயர்த்தப்பட்டாலும் மனுஷ சரீரத்தின் தரம் உயர்த்தப்படவில்லை. முதலாம் உலகப் போரில் சேனைகள் மூன்றில் ஒரு பங்கு யுத்தத்திற்கு தகுதியற்றவர்களாய் காணப்பட்டார்கள். 1920-ல் மிகப் பெரிய அழுத்தத்தினால் குறைந்த பட்ச போஷாக்கு அநேகருடைய உடல் நலத்தை குறைக்கக் துவங்கியது. 1950-ல் தொலைக்காட்சி பெட்டிகளும், இருசக்கர வாகனங்களும் மனுஷனுடைய அனுதின செயல்களை நிறுத்தி வைத்தது. சர்க்கரை நோயும், இருதய நோயும் அதிகமாய் காணப்பட்டது. இதினிமித்தம் அநேகர் மரணமும் அடைந்தார்கள். ஜனங்கள் தங்களையே மிகவும் சோம்பேறிகளாக வைத்துக் கொள்வதற்கான புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தனர்.

உடற்பயிற்சிக்குண்டான பொதுவான ஸ்தாபனங்கள் காணப்படுவதற்கு முன் 1951-ம் வருடத்தில் ஜாக் லாலேன் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தேவையான உடல் பயிற்சிகளை தன்னுடைய தொலைக்காட்சியில் கற்றுக்கொடுத்தார். அது முதற்க்கொண்டு சுமை தூக்குவதற்காகவும், ஓடுவதற்காகவும், இன்னும் பல காரியங்களுக்கு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

தேவனுடைய கோட்பாடுகளை பின்பற்றுவதை எடுத்துக் காட்டும்படிக்கு "நட" என்ற வார்த்தையை வசனங்கள் உருவகமாக கூறுகிறது. "ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு" (ஆதி 17:1) இதற்கான மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டு சங்கீதத்திலுள்ளது." நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங் 23:4)

**இடுக்கமான பாதை**

கிறிஸ்தவர்கள் தங்களுடைய உடல் நலத்திற்காக நடை பயின்றாலும், இந்தப் பாதையில் நடப்பதைக் குறித்து வசனங்களில் அதிக முக்கியத்துவம் காணப்படுகிறது. ஒரு புது சிருஷ்டிக்கு இடுக்கமான பாதையில் செல்லக்கூடிய பயணம், தன்னுடைய பலியின் ஜீவியத்தின் ஒரு பகுதியாயிருக்கிறது. "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபே 2:10) காலங்கள் கொடியதாக இருப்பதினால் உடல் நலத்திற்காக நடை பயிலுவதைக் காட்டிலும், ஆவிக்குரிய நடைகள் நமக்கு அதிகமான பேரானந்தத்தை தருகிறது. (சங் 138:7)

ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் மற்றும் பலர் தேவனோடு நடந்தார்கள். அவர்கள் இயேசுவின் மரணத்திற்கு முன்னதாகவே வாழ்ந்ததினாலும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாததினாலும், இன்று நாம் நடக்கக்கூடிய நெருக்கமான பாதையில் அவர்கள் நடக்கவில்லை. ஆனாலும் தேவனுடைய இராஜ்யம் இந்த உலகத்தில் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும் போது, இந்த பூமியில் பரிபூரணமான மனுஷ நிலையை பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் பெறுவார்கள். (எபி 11:39, 40)

யூத ஜாதி தேவனோடு நடப்பதற்கு அழைப்பை பெற்றார்கள். ஆனாலும் அவர்கள் நடக்கவில்லை. "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்வீர்களாக. "(உபா 13:4) அவர்கள் தேவனோடு நடப்பதை நிறுத்தும் பொழுது தண்டிக்கப்பட்டனர். (உபா 28:15)

ஆதி சபையிலிருந்த இயேசுவின் சீஷர்கள் அனைவரும் இந்த இடுக்கமான பாதையில் நடப்பதற்கு தேவனிடத்திலிருந்த பரிசுத்த ஆவியை பெற வேண்டியதாக இருந்தது."கிறிஸ்து

இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். " (ரோம 6:3,4) பரிசுத்த ஆவியைப் பெற்று, வருங்கால வாழ்க்கைக்காக இக்காலத்து உரிமைகளை விட்டுக்கொடுத்தால், நிச்சயமாக கிறிஸ்துவுக்குள் ஜீவனைப் பெறுவோம். இவர்கள் தங்களுடைய ஜீவனை பரலோக தந்தையை சேவிப்பதற்கும், அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதற்கும், அவருடைய சித்தத்தை செய்வதற்கும் தங்களை அர்ப்பணித்து விடுகிறார்கள். (ரோம 12:1,2)

இந்த சுவிசேஷ யுகத்தில் இயேசு கிறிஸ்துவின் தலைமையை ஏற்றுக்கொண்டு, அவருடைய பாதையில் நடந்து, மரணத்துக்கு வழிநடத்தக்கூடிய பாடுகளை அனுபவித்து, தங்களையே பலி செலுத்துபவர்கள் மட்டுமே இடுக்கமான பாதையில் செல்ல வாய்ப்பைப் பெறுகிறார்கள்."ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்."(மத் 7:14) "நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." (வெளி 2:10)

கிறிஸ்தவர்கள் இந்த பூமியின் காரியங்களில் அன்பு கூறக்கூடாது என்று கூறப்படுகிறது. (1யோவ 2:15,16) உண்மை கிறிஸ்தவர்களின் செயல்களும், சிந்தனைகளும் - தேவனையும், இயேசுவையும் நோக்கியிருக்கவேண்டும். இருள் நிறைந்த உலகத்தில் இயேசுவின் பாதையில் நடப்பதற்கு வசனங்களின் ஆலோசனையை நாடவேண்டும். "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்கீ 119:105)

**விசுவாசத்தினால் நடப்பது**

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயி ருக்கிறது" என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. (எபி 11:1) உண்மைகளை உறுதிப்படுத்தும்படியாக சொல்லப்படும் நம்பிக்கையுள்ள வார்த்தைகளே விசுவாசம் என்ற வார்த்தையின் அர்த்தமாகிறது. தீர்க்கதரிசிகளின் நாட்களில், தேவன் தரிசனங்கள், காட்சிகள், சொப்பனங்கள் மற்றும் தூதர்களின் மூலமாகவும், தம்முடைய ஜனங்களோடு தொடர்பு கொண்டிருந்தார். (எபி 1:1)இஸ்ரயேலை பொருத்தவரையிலும், தேவன் அவர்களை பகலில் காணக்கூடிய மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் காணக்கூடிய அக்கினி ஸ்தம்பத்தினாலும், வனாந்திரத்தில் வழி நடத்தினார்.(யாத் 33:11) அப்பொழுது தேவன் மோசேயின் மூலமாக அவருடைய ஜனத்தோடு தொடர்பு கொண்டார். ஆபிரகாம் தேவன் மேல் மட்டும் வைத்திருந்த விசவாசத்தை செயலாற்றினார். தேவன் சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை அவரிடம் உறுதியாக காணப்பட்டது. "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்." (ரோம 4:20,21)

இன்றைய கிறிஸ்தவர்கள் ஆசீர்வாதம் பெறுவதற்கு விசுவாசத்தின் விதிமுறை ஒன்றை தேவன் வைத்திருக்கிறார். "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்." (11கொரி 5:7) தேவனை காணாத போதிலும் அவரை விசுவாசிப்பதற்கு கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் எங்கு வழிநடத்துகிறார் என்று அறியாத போதிலும் அவரை பின்பற்ற வேண்டும். நம்முடைய முழு பலத்தோடும், விசுவாசத்தோடும் இதை செய்ய வேண்டும்."சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டே னென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். "( பிலி 3:13,14) தேவனுடைய வாக்குத் தத்தங்கள் ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்த வேண்டும்."நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே." (எபி 13:5) இப்படியாக, நம்முடைய ஆண்டவரின் கையோடு கைக்கோர்த்து நடக்கவேண்டும்.

**ஆவியில் நடப்பது**

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;" (பிலி 2:5) தேவனுடைய ஆவி அவர்களுக்குள் வாசமாயிருந்து, மாம்சமான காரியங்களை புறம்பே தள்ளி, கிறிஸ்துவ வாழ்க்கைக்கு எதிரான விஷயங்களை புறக்கணித்து, தேவன் காட்டும் பாதையில் நடப்பதே ஆவியில் நடப்பதாகும். (ரோம 8:13) ஒரு கிறிஸ்தவர் உலக விருப்பங்களுக்குள் தன்னுடைய ஆவியை (சிந்தையை) செலுத்தினால் புது சிருஷ்டியின்

வளர்ச்சி குறைந்து விடும். தேவனுடைய ஆவி ஒருவருக்குள் நிலைத்திருந்தால், விழுந்துபோன மாம்சத்தின் நிலையில் அவர்கள் வாழ முடியாது. தேவனுடைய ஆவியில் நிலைத்திருந்தால் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி பெற்று ஆண்டவருடைய பணியில் உற்சாகத்தோடு ஈடுபடலாம்."பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிற ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. (கலா 5:16-18)

ஆவியின் கனியை - அன்பு, சந்தோஷம், சமாதானம் , நீடிய பொறுமை, சாந்தம், இச்சை அடக்கம், விசுவாசம் என்று பவுல் விவரிக்கிறார். "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். "(கலா 5:25)

**அன்பில் நடப்பது**

தேவன் நம்மேல் வைத்த அன்பினால் தன்னுடைய ஒரே பேறான குமாரனை நமக்கு கொடுத்தார். (யோவ 3:16) அன்பின் ஆவியை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தினபடியே அவருடைய சீஷர்களாகிய நாமும் வெளிப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி,. கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்."(எபே 5:1,2)

வல்லமை, அறிவு, பலிகள் - அனைத்தும் அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். (1கொரி 13 அதிகாரம்) கிறிஸ்துவ நடக்கையின் ஆரம்பத்திலே, இந்த வளர்ச்சி துவங்க வேண்டும். முதலில் தெய்வீகமான அன்பின் தேவையை நாம் உணர்ந்து கொண்டால், பிற்காலத்தில் அது நம்முடைய கடமையாக மாறிவிடும். ஒருவர் இந்த பாதையில் முன்னேறி செல்லும் போது, இந்தக் கடமையானது, தேவன் நமக்கு செய்த காரியங்களின் ஆழமான காரியங்களை புரிந்துகொள்ள வழிநடத்தும். அதற்குபின் நம்மில் வளரக்கூடிய அன்பானது, மற்ற கிறிஸ்தவர்களின் குற்றங்களையும், குறைகளையும் மன்னிக்க வழிவகுக்கும். இறுதியாக நமக்குள் வளர்ச்சியடையக்கூடிய அன்பு தேவனையும் கிறிஸ்தவர்களையும் மட்டுமல்ல, விரோதிகளையும் நேசிக்கும். இப்படிப்பட்ட அன்பை இந்த மனுக்குலத்திற்காக தன்னுடைய ஜீவனைத் தந்து இயேசு வெளிப்படுத்தினார். (1தீமோ 2:6)

**கிறிஸ்து நடந்தது போல நடப்பது**

"அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும். "(1யோவா 2:6) "நிலைத்திருப்பது" என்றால் அவரோடுகூட ஐக்கியப்பட்டு வாழ்வது என்று பொருள். இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றும் புது சிருஷ்டிகளின் புதிய சிந்தையும், புதிய இருதயமும் அவரோடு ஐக்கியப்பட்டு நடக்க வேண்டும். சிந்தைகள், வார்த்தைகள், கிரியைகள் அனைத்தும் - நன்மையான காரியங்களை நேசித்து, தீமையான காரியங்களை வெறுக்க வேண்டும். (லூக் 6:45, ரோம 12:9) ஆண்டவராம் இயேசு எப்பொழுதும் பிதாவின் சித்தத்திற்கு இசைவான வாழ்க்கையை வாழ்ந்தார். அவரை போல் நடக்க விரும்பும் யாவரும் இயேசுவைப் போல் நடக்க வேண்டும். "ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக." (கொலோ 2:6,7) "அவரோடுகூட நடப்பது" என்ற வார்த்தைக்கு பதிலாக "அவருக்குள் ஜீவிப்பது" என்ற வார்த்தையை பயன்படுத்தலாம். தங்களுடைய சரீரங்களை பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். (ரோம 12:1) இப்படி செய்வதற்கு முழுமையான அர்ப்பணிப்பு தேவை. இயேசு சொன்ன உபதேசங்களைப் பெற்றுக்கொண்டு, அவருடைய அன்பை உணர்ந்தவர்களாக, அவர் பின்வைத்துப் போன மாதிரியை பின்பற்றுவதே, இயேசுவை போல் நடப்பதாகும்.

**சத்தியத்தில் நடப்பது**

"கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்." (சங் 86 :11) இந்த முழு மனுகுலத்திற்கான தேவனுடைய திட்டத்தை வேதாகமம் கோடிட்டு காட்டுகிறது. ஆனால், வெகு சில கண்களும், காதுகளும் மட்டுமே அதை உணர்கிறது. புரிந்து கொள்ளக்கூடிய இந்த திறன் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கொடுக்கப்படுகிறது."தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். "(எபே 1:18) சகல உண்மைகளைப் பற்றின அறிவின்

ஊற்று தேவனுடைய வார்த்தைகளில் உள்ளது. ஆகவே ஒரு கிறிஸ்தவன் வேதத்தை வாசித்து, மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டப்பட்டு, கற்றுணர்ந்த சத்தியத்தை தன்னுடைய நடத்தையிலும் குணத்திலும் பிரதிபலிக்க வேண்டும். (யூதா 20)"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை. " (3 யோவா 4) என்று தன்னுடைய சகோதரர்களைக் குறித்து யோவான் எழுதினார்.

**ஒளியில் நடப்பது**

கிறிஸ்தவர்கள் இருளில் நடந்துகொண்டு, சரியான பாதையில் நிலை நிற்க முடியாது. "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் " (1யோவா 1:5-7)

ஆதாமின் வீழ்ச்சிக்குபின், உண்மையான ஒளியாகிய இயேசு வரும் வரைக்கும் இந்த முழு உலகமும் இருளில் நடந்து கொண்டிருந்தது. இயேசு தேவனுடைய ஒளியை இந்த உலகத்திற்கு கொண்டு வந்தார். விசுவாசமுள்ள சீஷர்கள் மட்டுமே இந்த ஒளியைக் கண்டார்கள். ஏனெனில் தேவனுடைய பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலினாலே, தேவனுடைய வார்த்தைகளிலுள்ள அந்த ஒளியை புரிந்துகொள்ள முடிந்தது. மனுக்குலம் உயிர்த்தெழும் காலத்தில், அவர்களுக்கு தேவையான ஒளியை சபை பிரகாசிக்கும். அப்பொழுது இக்காலத்திலுள்ள இருள் நீக்கப்பட்டு இந்த பூமி கர்த்தரை அறியும், அறிவினால் நிரப்பப்படும் (ஆபகூக் 2:14) எப்படிப்பட்ட ஆசீர்வாதம் ! "இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு, மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான்.ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான் என்றார். " (யோவா 11:9,10)

**பாத்திரமாக நடந்து கொள்வது**


"ஆதலால்,.. நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து" (எபே 4:1) கொள்ளுங்கள் என்று கிறிஸ்தவர்களுக்கு சொல்லப்படுகிறது. இவர்கள் தெய்வீக பணிக்கு அழைக்கப்பட்டி ருக்கிறார்கள். எந்த விதமான பூமிக்குரிய அழைப்பும் இந்த பணியை தடை செய்ய அனுமதிக்கக்கூடாது. "இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்... "(கொலோ 1:9,10) கிறிஸ்துவை பின்பற்றும் யாவரும், மற்ற கிறிஸ்தவர்களுக்கு நல்ல மாதிரிகளாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாக இருக்கக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஒவ்வொருவரும் மகிமை அடைந்த இயேசுவின் சிங்காசனத்தில் அமர்வதற்கும், முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கக் கூடிய மகிழ்ச்சியில் பங்கடைவதற்கும் பாத்திரவான்களாக நிரூபிக்கப்படவேண்டும்."தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்." (தெசலோ 2:12)

**ஞானமுள்ளவர்களை போல நடப்பது**

"ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்." (எபே 5:15,16) ஞானமுள்ளவர்கள் - விழித்திருந்து கவனத்தோடும் எச்சரிப்போடும் இருக்கவேண்டும். நம்முடைய நோக்கங்கள் பிதாவையும், இயேசுவையும் மையமாகக் கொண்டிருக்க வேண்டும். அதன் பிரதிபலிப்பு நம்முடைய கிரியைகளில் வெளிப்பட வேண்டும்.

கிறிஸ்தவர்கள் பரலோக பிரகாரத்தில் செல்வதற்கு முன் அவர்கள் சுத்திகரிக்கப்பட்டு மேன்மையான நிலையை அடைய வேண்டும். தேவன் விரும்பும் பரிசுத்த நிலையைப் பெறுவதற்கு, நம்முடைய இருதயத்தில் சத்தியம் நிரப்பப்பட வேண்டும். அதுவே நம்முடைய சிந்தைக்கும், வாழ்க்கைக்கும் வழி காட்டியாயிருக்க வேண்டும். இப்படியாக அவரோடு நடப்பதற்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.ஆகவே நாம் ஒருவருக்கொருவர் கைகளைக் கோர்த்து, அவரோடு கூட நடக்கலாம். ஏனெனில் நாம் இடறி விழாமல் நம்மை தாங்குவதற்கும், கிறிஸ்துவின் சாயலை நமக்குள் உருவாக்குவதற்கும் அவரால் மட்டுமே கூடும்.

# இளைப்பாறுதல்



"தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்."(மாற்கு 6:31)

**Roert Brand**

நீண்ட காலமாக கிறிஸ்தவர்களின் மத்தியில் ஓய்வைப் பற்றிய பாடத்தில் அநேக முரண்பாடுகள் காணப்படுகிறது. நம்முடைய பிதாவின் வேலைகளை பொருத்த வரைக்கும் - வேதபடிப்பு ,சாட்சி கூறுதல், ஆவிக்குரிய ஐக்கியங்கள் போன்ற காரியங்களுக்கு ஓய்வு என்ற காரியம் எதிரிடையாக தோன்றுகிறது. ஆயினும் தேவனுடைய பணியை ஓய்வின்றி செய்ய இயலாது என்பதை அனைவரும் ஒத்துக் கொள்கிறார்கள். அதே போல குடும்பத்திலுள்ள நியாயமான பொறுப்புகளிலும், அன்றாட வாழ்க்கையிலும் இக்காரியம் நியாயமாக தோன்றுகிறது.

பத்து கட்டளைகளில், இஸ்ரயேலின் ஓய்வு நாளைக் குறித்து கொடுக்கப்பட்டுள்ள நான்காவது கட்டளையைப் பார்க்கலாம். "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். "(யாத் 20:8-11)

"சாபாத்" என்ற ஆங்கில வார்த்தை "ஷாபாத்" என்ற எபிரெய வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கு 'ஓய்வெடுத்தல் 'என்று பொருள். யூத ஜனங்கள் ஆறு நாட்கள் வேலை செய்தபின் ஏழாம் நாளில் அவர்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று தேவன் இப்படிப்பட்ட ஒரு ஒழுங்கை ஏற்படுத்தியிருந்தார். ஏழு கால பகுதிகளில் உள்ள ஒரு காலப்பகுதியில் ஓய்வெடுத்தார்கள். மனித சரீரத்திற்கும், சிந்தனைக்கும் ஏழு நாட்களில் ஒரு நாள் ஓய்வெடுக்க வேண்டும் என்பதை ஒரு பொதுவான கோட்பாடாக ஓய்வு நாளின் பிரமாணத்திலிருந்து நாம் எடுத்துக் கொண்டோம். நம்முடைய சரீரமும், மனநிலையும் புத்துணர்ச்சி பெறுவதே இந்த ஓய்வுநாளின் முக்கிய நோக்கமாக இருந்தது. ஒரு மனுஷன் சிறப்பாக செயல்படுவதற்கு இப்படிப்பட்ட ஓய்வுகள் வழிவகுத்தது.

ஓய்வு நாள் ஒரு பரிசுத்த நாளாய் இருந்ததா ? ஓய்வுநாள் பரிசுத்தப் படுத்தப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஆயினும் அன்றைய தினங்களில் தேவனுடைய வார்த்தைகளை படிப்பதற்கும், விலையேறப் பெற்ற விசுவாசம் உள்ளவர்களின் ஐக்கியத்தைக் குறித்தும் அந்த கற்பனை எதுவும் கூறுவதில்லை. சரீரத்திற்கு கொடுக்கப்படும் ஓய்வை மட்டுமே அந்த பிரமாணம் கூறுகிறது. "பரிசுத்தப்படுத்தல்" என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்ட எபிரெய வார்த்தைக்கு பிரித்து வைப்பது அல்லது தனித்து வைப்பது என்று பொருளாகும். அதாவது வேலை செய்யக்கூடிய ஆறு நாட்களிலிருந்து ஒரு நாள் பிரித்து வைக்கப்படுகிறது. அவசியமாக வாரத்தின் ஒரு நாள் பிரித்து வைக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மற்றொரு வார்த்தையில் சொல்லப்போனால் தேவன் மனுஷனுடைய ஓய்வுக்காக ஏற்படுத்தின ஒழுங்குக்கு கீழ்ப்படிவதை நாம் மறக்கக் கூடாது. சரியான நேரத்தில் ஓய்வெடுத்து புத்துணர்ச்சி பெறும் பொழுது மனுஷ சிருஷ்டிப்பு சரியாக இயங்கும் என்பதை நம்முடைய சிருஷ்டிகராகிய பரலோக பிதா நன்கு அறிந்திருக்கிறார். (ஓய்வு நாளின் பிரமாணம் மனுஷ சரீரத்திற்கும் மட்டுமல்லாமல் அந்நியர்களுக்கும் மிருகங்களுக்கும் இது பொருந்தக் கூடியதாயிருக்கிறது.)

தெளிவாக சொல்லப்போனால் ஓய்வு நாளை கடைபிடிப்பவர்கள் அடையக்கூடிய நன்மைகள் என்ன என்பது கொடுக்கப்படாவிட்டாலும், அதை மீறுகிறவர்களுக்குரிய தண்டனை கொடுக்கப் பட்டுள்ளது."ஆறுநாளும் வேலை செய்யலாம்; ஏழாம் நாளோ வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது; ஓய்வுநாளில் வேலைசெய்கிறவன் எவனும் கொலை செய்யப்படவேண்டும். "( யாத் 31:15) வேலை செய்தால் மட்டுமே சட்டம் மீறப்படும், ஆகவே ஓய்வுநாளில்

அனைவரும் ஓய்வு எடுத்துக் கொண்டு, அந்த பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். உண்மையில் நம்முடைய ஆண்டவருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இந்த ஓய்வு நாளைக் குறித்து தொடர்ந்து எதிர்ப்புகள் வந்து கொண்டிருந்தது. அவர்கள் ஆவிக்குரிய நன்மைகளை செய்தாலும் அவர்கள் வேலை செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டார்கள்.

ஓய்வு நாள் பொதுவாக ஆன்மீக கிரியைகளோடு சம்பந்தப்பட்டிருப்பதாக வசனங்கள் குறிப்பிடுகிறது. கொடுக்கப்பட்ட அந்த ஓய்வுநாளில், தேவனோடு உடன்படிக்கை செய்த யூத ஜனங்களாக தங்களுடைய சிருஷ்டிகரை தொழுது கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஆகவே அந்த நாளில், யூதர்கள் ஆலயத்திற்கு சென்று ஆன்மீக ஒழுங்குகளை நிறைவேற்றினார்கள். மீதியுள்ள நேரங்களை பரிசுத்தமான காரியங்களை செய்வது அவரவருடைய விருப்பத்தின்படி பயன்படுத்தினார்கள். இப்படியாக, விசுவாசமுள்ள யூதர்கள் தங்களுடைய ஓய்வு நாளை பயபக்தியோடு ஆசரித்து, அதை ஓய்வு நாளாக மட்டும் அல்ல பரிசுத்த நாளாகவும் ஆசரித்தார்கள்.

விசுவாசமுள்ள யூதர்களைப் போல இயேசுவும் அவரது சீஷர்களும் ஓய்வு நாளை கடைபிடித்தார்கள். தேவனுடைய கற்பனைகளை கடைபிடிக்க வேண்டிய முக்கியத்துவத்தை இயேசு நன்கு அறிந்திருந்தார். சரீரத்திற்கு தேவையான ஓய்வைக் குறித்தும், அவர் நன்கு அறிந்திருந்தார். தேவன் ஓய்வு நாளின் பிரமாணத்தை கொடுத்ததன் நோக்கத்தைக் காட்டிலும், அதிக கடுமையாக, அதை கடைபிடிக்க வேண்டும் என்று நம்முடைய ஆண்டவரின் நாட்களில், சில மதத் தலைவர்கள் கற்பித்தார்கள். இவர்கள் அன்றாட வேலைகளை அதிகமாக விரிவாக்கி தேவையில்லாத பாரத்தை யூதர்கள் மேல் சுமத்தினார்கள். ஒரு ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் இயேசு போதித்துக் கொண்டிருக்கையில், வியாதிப்பட்ட ஒரு ஸ்தீரியை குணமாக்குவதற்கு இயேசு முற்பட்ட போது இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்தது. அங்கிருந்த அனைவரிடமும் அதிருப்தி காணப்பட்டது. "இயேசு ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கினபடியால், ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி: வேலைசெய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக்கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான். "(லூக் 13:14-17) கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டிய தில்லையா என்றார்.அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக குறித்தும் சந்தோஷப்பட்டார்கள். "

அங்கு மதத்தலைவர்களின் தவறை இயேசு சுட்டிக்காட்ட வேண்டியதாக இருந்தது -"பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது;"(மாற் 2:27) விசுவாசமுள்ள யூதர்கள் மட்டுமே தாங்கள் பெற்ற ஓய்வு நாளை பரிசுத்த நாளாகவும் பயன்படுத் தினார்கள்.

அதே போல கிறிஸ்தவர்கள் இன்றைய நாளிலும், வாரத்தில் ஒரு நாள் (ஞாயிற்று கிழமை) தேவனை ஆராதிக்க ஒன்று கூடுகிறார்கள். (வாரத்தின் முதல் நாள் - 1கொரி 16:1,2, அப் 20:7, ஆண்டவரின் உயிர்த்தெழுதலை மகிழ்ச்சியோடு நினைவு கூறும்படியாக ஒன்று கூடினார்கள்) கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல. மேலும் கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளை கடைபிடிக்க வேண்டிய அவசியமும் இல்லை என்று அப்போஸ்தலராகிய பவுல் கூறினார். "ஆகையால்,...ஓய்வு நாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக." (கொலோ 2:16, ரோம 14:5)

ஓய்வு நாளுக்குரிய அற்புதமான அம்சங்களுக்கு அப்பாற்பட்ட, - (சொல்லர்த்தமாக, நிழலாக, பண்டிகையாக மற்றும் தீர்க்கதரிசனமாக) ஒரு பாடம் இதில் அமைந்துள்ளது. ஏழு நாட்களில், ஒரு நாள் ஓய்வுக்கென்று பிரிக்கப்படும் பொழுது, 7 நாட்களில் 6 நாட்கள் வேலை செய்யவேண்டும் என்று சொல்லப்படும் கட்டளையை கவனிக்க வேண்டும். ஓய்வு நாளில் எந்த வேலையும் செய்யாமல் ஓய்வு எடுப்பது போல மற்ற ஆறு நாட்கள் முழுமையாக வேலை செய்ய வேண்டும். நம்முடைய துவக்க வருடங்களில் நம்முடைய குடும்பங்களை பாதுகாப்பதற்கும், அவர்களை போஷிப்பதற்கும், நம்முடைய அதிகமான காலங்கள் செலவழிந்து விடுகிறது. நம்முடைய இறுதி வருடங்களில் பிள்ளைகள் வீட்டிலிருந்து சென்றவுடன் தேவனுடைய பணிகளை செய்வதற்கு புதிய வாய்ப்புகளை பெறுகிறோம். இவைகளை நாம் சரியாக

பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவருடைய வயதான நிலையில் "நாங்கள் மிகவும் சோர்ந்து போய்விட்டோம், எங்களால் ஒன்றும் முடியவில்லை" என்று சொல்லி தங்களை தாங்களே வஞ்சகத்திற்குள் அகப்படுத்திக் கொள்ளக்கூடாது. கஷ்டமாக இருந்தாலும், தொடர்ந்து மற்றவர்களுக்கு நன்மையான காரியங்களை செய்வதற்கு நம்மால் முடிந்தவரைக்கும் முயற்சிக்க வேண்டும். நீண்ட நாட்கள் விடுமுறை, பொழுது போக்கான காரியங்கள் போன்றவற்றைக் குறித்து ஆண்டவருடைய ஜனங்களுக்கு குழப்பமாக உள்ளது. நம்முடைய பராமரிப்பில் உடன்படிக்கை செய்யாத சிறு பிராயத்தில் உள்ளவர்கள் இருக்கும் பட்சத்தில், நம்முடைய முடிவுகள் சில நேரங்களில் மாற்றப்பட வேண்டும் என்பதை உணர வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய விருப்பத்திற்கு ஏற்றபடி சகலத்தையும் செலவழிக்கக் கூடிய சூழ்நிலையில், நாம் அவைகளை எவ்வளவு பயனுள்ளதாக பயன்படுத்த முடியுமோ (தேவனுடைய பணி) அவ்வளவாக பயன்படுத்த வேண்டும். ஆகவே சூழ்நிலைகளைப் பொருத்து, நாம் நேரங்களை பயன்படுத்த வேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும், அடிப்படையாக நம்முடைய சரீரத்திற்கும், ஆவிக்குரிய சிந்தைக்கும் தேவையான ஓய்வு கொடுத்து புத்துணர்வோடும் சிறப்பாக செயலாற்ற நாம் கவனமாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஓய்வுகள் நம்மால் இயன்ற மட்டும் நன்மையான காரியங்களை நடப்பிக்கச் செய்யும்.

உடன்படிக்கை செய்த ஒரு கிறிஸ்தவர் சோர்ந்து போகும் பொழுது புத்துணர்வு பெறக்கூடிய நேரம் வரைக்கும் ஓய்வு எடுப்பது நியாயமான காரியமாகும். ஆனால் அந்த நாட்களில் அவர் தொடர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தால், அது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சாதகமற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்திவிடும். ஆகவே நமக்காக ஓய்வுநாள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதே தவிர ஓய்வு நாளுக்காய் நாம் ஏற்படுத்தப்படவில்லை.

**நித்திரை**

சுறுசுறுப்பாக வேலை செய்யும் நேரத்தில் நமக்கு நித்திரை தேவைப்படும் போது, சற்று அசௌகரியமாகத் தோன்றலாம். ஆயினும், நித்திரை ஒரு அற்புதமான இயல் நிகழ்ச்சியாகும். நம்முடைய சரீரம் சரியாக இயங்குவதற்கு நித்திரை மிக அவசியம். மறுநாளில் புத்துணர்வோடு வேலை செய்வதற்கு ஒவ்வொரு இரவும் நித்திரை செய்யும்படி தேவன் உண்மையில், நம்முடைய சரீரத்தை வடிவமைத்திருக்கிறார். விஞ்ஞான ரீதியாக நித்திரை இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. வேகமாக கண் சிமிட்டுவது (rapid eye movement - REM), மெதுவாக கண் சிமிட்டுவது (non- rapid eye movement – non -REM). ஒரு மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் நித்திரை ஒரு முக்கியமான தேவையாக உள்ளது. ஒவ்வொரு மனுஷனுக்கும் நித்திரை செய்யக்கூடிய காலம் வேறுபடுகிறது. அவரவருக்குரிய உடல் நலத்திற்கு ஏற்றவாறு இந்த நித்திரை தேவைப்படுகிறது. ஆகவே ஒவ்வொருவரும் இந்த முக்கியமான பகுதியின் மேல் கவனம் வைத்து, தங்களுடைய உடல் நலனை சரியாக பராமரிக்கவேண்டும்.

சரீரத்திற்கான ஓய்வைக் குறித்து இயேசுவும் ஒரு காரியத்தை கூறுகிறார்."அவர் அவர்களை நோக்கி: வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்; ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்த படியினால் போஜனம்பண்ணு கிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது." (மாற் 6:31). இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்யும்பொழுது இச்சூழ்நிலை ஏற்பட்டது. இயேசுவுக்கும் அவருடைய அப்போஸ்தலர்களுக்கும் கிடைக்க பெற்ற சொற்ப நேரத்தில் -"நமக்கு அதிக வேலை உண்டு, ஆனாலும் நீங்கள் அனைவரும் சோர்ந்து போய்விட்டீர்கள் என்று அறிவேன், ஆகையால் சற்று நேரம் ஓய்வெடுங்கள்" என்று இயேசு கூறினார். ஏனெனில் தேவனுக்குரிய ஊழியத்திலும் சரீர ஓய்வு மிக அவசியம் என்று இயேசு அறிந்திருந்தார். இப்படிப்பட்ட ஓய்வுகள் தேவனுடைய பணிகளை அதிகமான உற்சாகத்தோடு செய்வதற்கு நமக்குள் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

சில நேரங்களில் தேவனுடைய பணியை நிறுத்தி விட்டு, எதையும் செய்யாமல் ஓய்வு எடுப்பது ஒரு சிறந்த காரியமாக இருக்கிறது. அப்பொழுது நம்முடைய சரீரமும் மனதும், புது பலத்தாலும் வல்லமையினாலும், புதுப்பிக்கப்பட்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் மீண்டும் பலமடைவோம்.

**தேவனுடைய ஜனங்களுக்குண்டான இளைப்பாறுதல்**

வனாந்திரத்தில் தேவனுக்கு கோபமூட்டின இஸ்ரயேல் ஜனங்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயருக்கு எழுதின புஸ்தகத்தில். "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார். " (எபி 3:11; சங் 95:11) என்று எழுதினார்.

" விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்; அவருடைய கிரியைகள் உலகத்தோற்றமுதல் முடிந்திருந்தும்:

இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார். "(எபி 4:3) என்றும் அவர் எழுதினார். இஸ்ரயேல் ஜனங்கள் ஓய்வு நாளை கடை பிடித்திருந்தாலும் அவர்களூடைய அவிசுவாசத் தினிமித்தம் தேவன் அவர்களுக்கு வைத்திருந்த மற்றொரு இளைபாறுதலுக்குள் அவர்களால் பிரவேசிக்க முடியவில்லை.


வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பிரவேசித்த பின், கிடைத்த நீண்ட ஓய்வைக் குறித்து தாவீது 95-ம் சங்கீதத்தில் பேசுகிறார். ஆகவே அந்த இளைப்பாறுதல் தேவனுடைய ஜனங்களுக்கு இந்நாளிலும் கொடுக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் வாதாடுகிறார். "யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்கு உட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக்குறித்துச் சொல்லியிருக்க மாட்டாரே. ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்." (எபி 4:8-11)

விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் பரலோகப் பிதாவை முழுமையாக நம்பி அவர் வழிநடத்துதலில் நடப்பவர்களின் அனுபவங்களை இளைப்பாறுதல் என்று கூறுகிறார். இதற்கு நம்முடைய ஆண்டவராம் இயேசு ஒரு சிறப்பான மாதிரியாக விளங்கினார். எவ்வளவு பிரச்சனைகள் குழப்பங்கள் ஏற்பட்டாலும் இயேசு அவைகளை மேற்க்கொண்டு, நமக்கு எவ்வளவு அற்புதமான மாதிரியை முன் வைத்திருக்கிறார்.

"நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்." (ரோ 14:8) என்று பவுல் எழுதினது போல, இந்த பூமிக்குரிய வாழ்க்கையில் நாம் அதிகதிகமாக அக்கரைக் காட்டி முக்கியத்துவம் கொடுப்பதற்கு அவைகள் நித்தியமானது அல்ல.. "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?" (மத் 6:25, 27) என்று நம்முடைய ஆண்டவர் ஞானமாக சீஷர்களுக்கு கற்பித்தார்.

பரலோக பிதாவுக்கு நீடிய பொறுமையோடு செய்யும் ஊழியங்களில் நமக்கு கொடுத்திருக்கும் மாதிரியின் படி சரியான நேரங்களில் ஒய்வெடுத்து, தொடர்ந்து சிறப்பாக பணி புரிவோம். சரீரத்திற்கு கொடுக்கப்படும் ஓய்வுகள் நிச்சயமாக ஆவிக்குரிய புத்துணர்ச்சியை நமக்குள் அதிகரிக்கும். இப்படியாக, நித்தமும் நம்முடைய புது சிருஷ்டியை போஷித்து நம்முடைய சரீரத்தின் செயல்பாடுகளையும், ஆவிக்குரிய செயல்பாடுகளையும் அதிகரித்துக் கொள்ளலாம்.

# கற்றுக் கொள்ளுதல்



"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. " (ரோமர் 15:4)

தங்களுடைய குழந்தைகள் ஏதோ ஒரு புதிதான காரியத்தை கற்றுக் கொள்வதில் பெற்றோர்கள் அடையக்கூடிய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்களை ஊக்குவிக்கும் போது தன் தாய்க்கு மட்டுமே புரியக் கூடிய ஒரு மழலை சிரிப்பை காணலாம். தவழக் கூடிய குழந்தை முதலில் நிற்க கற்றுக்கொள்கிறது. பின்பு சில அடிகள் எடுத்து வைத்து நடக்கக் கற்றுக் கொள்கிறது. கற்றுக் கொள்ளக் கூடிய இந்த செயல் முறையில் இரண்டு காரியங்கள் மிகத் தெளிவாக காணப்படுகிறது. 1.பெற்றோர்களைப் போல பிள்ளைகள் கற்றுக் கொள்வதில் திருப்தி அடைகிறார்கள். 2. எண்ணில் அடங்காத முறைகள் தோல்வி அடைவதற்கு பின்பாக புதிய திறமைகள் கற்றுக் கொள்ளப்படுகிறது. துரதிஷ்டவசமாக இவைகள் இரண்டும் காலத்திற்கு ஏற்றவிதமாக காலம் செல்ல செல்ல மாற்றமடைகிறது.

ஒரு சிறுவன் பள்ளிக்குள் நுழையும்பொழுது பாடங்களை கற்றுக் கொள்வதற்கான காரணங்களை அறியாதிருப்பான். அவனை கட்டாயப்படுத்தும் போது முதலில் அவன் தோல்வி அடைவான். இப்படிப்பட்ட காரியங்கள் சம்பவிக்கும்பொழுது பெற்றோர்களும், பிள்ளைகளும் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதினால் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். மற்றவர்களைக் காட்டிலும் இந்த பிள்ளைக்கு அறிவு குறைவாக உள்ளது என்ற சிந்தனைகள் பதிந்து விடுகிறது. ஆகையால் இப்படிப்பட்ட நிலையில் அநேகர் பின் வாங்கி விடுகிறார்கள். அதே நேரத்தில் குழந்தைகளாக இருக்கும் பொழுது பல தோல்விகளுக்குப்பின்பு அவர்கள் கற்றுக்கொண்ட புதிய காரியங்களை குறித்து மறந்து விடுகிறார்கள். ஒரு விளையாட்டாக கற்றுக்கொள்ளப்பட்ட நினைவுகள் மறக்கப்படுகிறது.

பள்ளியில் தங்கியிருக்க கூடிய அநேகர் தங்களுடைய படிப்பு முடிந்ததாக எண்ணலாம். ஆயினும் அவர்கள் புதிதாக எந்த வேலைக்குச் சென்றாலும் அவர்கள் அதில் தேர்ச்சி பெற வேண்டும். ஆகவே ஒருவர் 7 முதல் 10 வேலைகளை வாழ்க்கையில் செய்திருக்கலாம். சில வேலைகளுக்கு கல்லூரி படிப்பை தகுதியாக வைத்திருக்கலாம். இந்த கல்லூரி படிப்பினால் ஒருவர் நல்ல பண்புகள் உடையவராகவும், சுய ஒழுக்கம் உடையவராகவும், புதிய திறமைகளை கற்றுக் கொள்ள விருப்பம் உடையவராகவும் இருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு.

கற்பித்தல் என்ற காரியம் பல வகைகளில் வேத வசனங்களில் காணப்படுகிறது. "நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்." (பிலி4:11) என்று பவுல் எழுதினார். இவர் கற்றுக்கொண்ட பாடம் ஏதோ அற்பமானதல்ல, தன்னுடைய வாழ்க்கையின் அனுபவங்களில் இப்படிப்பட்ட பாடத்தை கற்றுக் கொண்டார். இந்த பாடத்தை அவர் முன்னதாக படித்தப் பள்ளியில் கற்றுக்கொள்ளவில்லை, மாறாக தன்னுடைய வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டார். அதுபோல நம்முடைய அனுபவங்களிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

**கிறிஸ்துவின் பள்ளி**

கல்வியின் மேல் முற்றிலும் வித்தியாசமான ஒரு கண்ணோட்டத்தை ஆவிக்குரிய புது சிருஷ்டிகள் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் குறித்த வருடங்களுக்கு அல்ல, வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவின் பள்ளியில் இருப்பதை அறிந்திருக்கிறார்கள். தங்களுடைய போதகர் எதை கற்றுக் கொடுத்தாலும் அதை மகிழ்ச்சியோடு கற்றுக்கொள்கிறார்கள். எத்தனை முறை தோல்வி அடைந்தாலும் தொடர்ந்து மகிழ்ச்சியாக கற்றுக் கொள்கிறார்கள்.." நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்." (சங்119:71) என்று சங்கீதக்காரர் குறிப்பிடுகிறார். தேவனுடைய ஒரே பேறான குமாரனும் அநேக பாடுகளின் வழியாக கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். (எபி 5:8) "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்." (நீதி 24:16) என்று ஞானி எழுதினார். "நாம் ஒருபோதும் வீழ்ச்சி அடையாத நிலையை வைத்து நாம் மகிமையாக எண்ணப்படாமல், நாம் விழும் ஒவ்வொரு முறையும் எழுந்திருக்க முயற்சிப்பதில், நம்முடைய மகிமை வெளிப்படுகிறது. " என்று சீனத் தத்துவ மேதையாகிய கன்புசியஸ் கூறினார்.

நம்முடைய வாழ்நாள் முழுவதிலும் தொடர்ந்து கிறிஸ்துவின் பள்ளியில் பயிற்றுவிக்கும் பொழுது நம்முடைய கண்ணோட்டங்கள் விரிவாக்கப்பட்டு நம்முடைய வாழ்க்கையின் தரம் உயர்த்தப்படும். உலகம் தரக்கூடாத சமாதானத்தையும், இளைப்

பாறுதலையும் நமக்கு கொடுக்கும். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்." (மத் 11:29) என்று இயேசு கூறுகிறார். கற்றுக்கொள்ளுதலினால் நமக்கு கிடைக்கும் மகிழ்ச்சியையும்,திருப்தியையும் பற்றி மற்றவர்கள் புரிந்து கொள்ளமுடியாது.

பொதுவாக கிறிஸ்துவின் பள்ளியில் பாடல்கள் பாடுவதாக யாரும் சிந்திக்க மாட்டார்கள். ஆனால், "அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக் கொள்ளக்கூடாதிருந்தது." (வெளி 14:3) என்று ஜெயம் பெற்றவர்களைக் குறித்து யோவான் எழுதுகிறார்.

ஆசிரியர், அனைவருக்கும் ஒரே விதமாக கற்றுக்கொடுத்தாலும், கற்றுக்கொள்ளக்கூடிய வாஞ்சையுள்ள ஒவ்வொரு மாணவரும் தாம் கற்றுக் கொண்டதை, தங்களுடைய வாழ்க்கையில் அப்பியாசப் படுத்தவேண்டும். கிறிஸ்துவின் பள்ளியில் எளிதாகவும், திருப்தியாகவும் கற்றுக் கொள்வதற்கு சில கோட்பாடுகள் வரிசைப் படுத்தப்படுகிறது.

**1.மற்றவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டியவை.** பேதுரு தன்னுடைய இரண்டாம் நிருபத்தை அவரைப்போல, "தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு," (11பேதுரு 1:1) எழுதினார். நாம் மற்றவர்களிடமிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; (பிரச 4:9) என்று ஞானி கூறுகிறார்." சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்;" (எபி 10:25) என்று நமக்கு ஆலோசனை சொல்லப்படுகிறது.

**2.கற்றுக் கொள்வதை வாழ்க்கையில் நடைமுறை படுத்தவேண்டும்** - புத்தகங்கள் படிப்பது நல்லது. ஆனாலும், பேப்பர், மை, வண்ணம், பிரஷ் போன்ற காரியங்களை படிப்பதினால் ஒருவர் ஓவியனாக முடியாது. தேவையற்ற காரியங்களை படிப்பது வீணாக இருக்கும். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் உற்சாக மூட்டும் கட்டுரைகளை வாசித்து, இடுக்கமான பாதையில் நடப்பவர்களோடு நடந்து, நம்மை ஊக்குவிக்கும் பிரசங்கங்களை கேட்பது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவியாயிருக்கும். இப்படியாக நாம் கற்றுக் கொள்வதை நடைமுறை படுத்தாவிட்டால் அதில் எந்த பயனும் இராது. " அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்." ( யாக் 1:22)

**3. மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தல்** - நாம் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பதை முதலில் நாம் கற்றுக்கொள்கிறோம். ஒரு பாடத்தை ஒருவர் படிப்பதைக் காட்டிலும் படித்த பாடத்தை ஒருவருக்கு கற்பிக்கும் பொழுது அது நமக்குள் மிக வல்லமையாக செயல்படுகிறது. நம்மில் அநேகர் பள்ளிக்கு சென்று அநேக மாணவர்களுக்கு கற்பிக்காவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் நாம் மற்றவர்களுக்கு காரியங்களை கற்றுக் கொடுத்து கொண்டிருப்போம். நண்பர்கள் மத்தியில் பரிமாறப்படக் கூடிய வேத வசனங்களும் ஒரு வகையான கற்பித்தலாகும். அதின் மூலமாக நாமும் கற்றுக் கொள்ளலாம். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து" (மத் 28 :19) என்று இயேசு கூறினார்.

**4. காலை நேரங்களில் வேத வாசிப்புகளுக்காக நேரத்தை ஒதுக்க வேண்டும்.** ஒரு நாள் துவங்கும்பொழுது வேத வாசிப்புக்காகவும், தியானத்திற்காகவும், நேரத்தை ஒதுக்க வேண்டும். அடுத்து வரும் சபை கூடுகைக்கு தேவையான ஆயத்தத்தையும் செய்ய வேண்டும். இப்படிப் பட்டவர்கள் அதிகமான ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வார்கள். பக்திக்குரியக் காரியங்களை நாம் படிப்பதின் மூலமாக நம்முடைய சிந்தனைகள் மேன்மையான நிலைக்கு உயர்த்தப்படும். இப்படியாக நாளின் துவக்கத்தில் தேவனுடைய காரியங்களுக்காக நேரத்தை ஒதுக்காவிட்டால், அந்த நாள் முழுவதிலும் பக்திக்குரிய காரியங்களை செய்வதற்கு வாய்ப்புகள் கிடைக்காமல் போய்விடும். ஏனெனில், அந்தந்த நாளுக்குரிய வேலைகள் நேரத்தை ஆக்கிரமித்து கொள்ளும்.

5. **பழைய சத்தியங்களை புதுப்பித்தல்."** நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்" (11தீமோ 3:14) என்று பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுகிறார். தீமோத்தேயு , பவுலிடமிருந்து கற்று அறிந்திருந்தாலும் பவுலின் மரணத்திற்குப்பின் அவர் தொடர்ந்து கற்றுக் கொண்டிருந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆயினும் அவர் கற்றறிந்த பழைய சத்தியங்கள் இன்னும் உற்சாகமூட்டக் கூடிய சத்தியங்களாகவே இருந்தது. எனவே "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க

மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்." (11தீமோ 4:3,4) என்று பவுல் தீமோத்தேயுவை எச்சரித்தார். நிச்சயமாக தேவனுடைய வார்த்தைகளில் கண்டுபிடிக்கப்படும் புதிதான சத்தியங்கள் தேவனுடைய ஆசீர்வாதமாகவே இருக்கிறது. புதிய சத்தியங்கள், புதிய வைரங்களைப்போல் அழகாய் தோற்றமளித்தாலும் பழைய சத்தியங்களும் மிகவும் அழகான தோற்றத்தை உடையதாய் இருக்கிறது. ஏனெனில் அந்த சத்தியங்களே ஆதியில் தேவனிடத்தில் நம்மை வரவழைத்தது.

**6. நீங்கள் கற்றுக் கொள்வது என்ன என்பதை சிந்தியுங்கள்.** வாசிக்கக்கூடிய பழக்கமுடையவர்களின் சிந்தனை ஒரு குறிப்பிட்ட வயதிற்கு பின்பு திசை கெட்டுப்போய் விடுவதாக ஆல்பிட் ஐயன்ஸ்டீன் கூறுகிறார். ஏனெனில் ஒரு மனுஷன் அதிகமாய் படித்து, அவைகளை குறைவாக நடைமுறை படுத்தும் பொழுது, தனித்து சிந்திக்ககூடிய சோம்பேறியான பழக்கத்திற்கு அடிமைப்படுவதாக கூறுகிறார். ஆகவே சில மதங்களில் தனித்து சிந்திப்பது ஊக்குவிக்கப் படுவதில்லை. ஒருவர் கேட்கக்கூடிய பிரசங்கத்தை விசுவாசித்தால் மட்டும் போதும் என்று கூறப்படுகிறது. அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.(அப் 17:11, 1தெச 5:21)

**7. கற்றுக்கொள்ளுதலை முக்கியப் படுத்துதல்** ஒருவரும் உங்களை கற்றுக் கொள்ள கட்டாயப்படுத்துவதில்லை. கற்றுக் கொள்வதற்கு நமக்குள் சுய ஒழுக்கம் தேவைப்படுகிறது. "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற... " (11தீமோ 3:7) இப்படிப்பட்டவர்களை போல் இருக்க வேண்டாம் என்று பவுல் எச்சரிக்கிறார். ஆவிக்குரிய கற்றுக் கொள்ளுதல் நம்முடைய வாழ்க்கையின் பழக்கமாக மாறிவிட்டால் நிச்சயமாக எல்லையில்லா மகிழ்ச்சியை வாழ்க்கையில் அனுபவிக்கலாம். உண்மையில் "பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது" (அப் 26:24) என்று கூறுவது போல சிலர் கூறலாம். ஆனால் பவுல் அல்ல, பெஸ்துவே கற்றுக்கொள்வதில் குறைவுள்ளவராக இருந்தார்.

**வாழ்நாள் முழுவதும் கற்பது**

ஊக்குவிக்கப்பட்ட மனநிலை ஆரோக்கியமான சிந்தனைகளை தரும். வயது சென்றாலும், இப்படிப்பட்ட தூண்டுதல்கள், இருதயத்தின் எண்ணங்களை விழித்திருக்க செய்யும். சிந்தனையில் வளமான காரியங்கள் எளிதில் செயலாற்றும் நிலையில் நம்முடைய மூளை வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒருவர் வயது சென்ற நிலையிலும் புதிய எண்ணங்களை விவேகமாக அவருடைய மூளை சிந்திக்கலாம். இருதயத்திலிருந்து வெளிவரும் இரத்தத்தில் கால் பகுதி மூளைக்கு செல்கிறது. இந்த சரீரத்திற்கு உடற்பயிற்சி அவசியமாக இருப்பதுபோல மூளைக்கு தேவையான தூண்டுகோலும் போஷாக்கும் தேவைப்படுகிறது.

வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொள்ளுதல், நம்முடைய மூளைக்கு ஆரோக்கியமான காரியமாகும். நம்முடைய சிந்தையை எப்பொழுதும் உற்சாகமாக வைத்திருப்பதினால், சமுதாயத்தில் பலரிடம் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால் ஒருவருக்கு வயது செல்ல செல்ல இக்காரியங்களில் குறைவு ஏற்படுகிறது. நம்முடைய வாழ்க்கையின் சம்பவங்கள் சவாலாக இருக்கும்பொழுது, வாழ்க்கை முழுவதும் அந்த சவால்களை சந்திப்பதற்கு நாம் எப்பொழுதும் கற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருப்பது மிக அற்புதமானதும், அவசியமானதுமாக இருக்கிறது.

இப்படியாக வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டிருக்கும்பொழுது நம்முடைய சரீரமும் இருதயத்தின் சிந்தனைகளும் எப்பொழுதும் புத்துணர்வுடன் காணப்படும். நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நாம் நடக்கும்போது நம்முடைய வாழ்க்கை மேலும் நிறைவாக காணப்படும்.

"நீங்கள் நாளை மரிப்பதை எண்ணி இன்று வாழுங்கள், நீங்கள் என்றும் வாழ்பவரைப் போல கற்றுக்கொள்ளுங்கள்" என்று மகாத்மா காந்தி கூறினார். வருங்காலத்தில் மனுஷனுக்காக தேவனுடைய திட்டத்தின்படி உலகத்தாரும், இக்காலத்திலும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களும், தங்களுடைய பாடங்களை நன்றாக கற்றுக் கொண்டால், நிச்சயமாக "என்றும் ஜீவிப்பார்கள்". "உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (எசா 26:9) "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். "(ஆப 2:14)

நல்ல ஔஷதம்

# மகிழ்ச்சி



"மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்."

(நீதி 17:22)

**Homer Montague**

சந்தோஷம், பேரானந்தம், மனரம்மியம், இன்பம் போன்ற மனநிலையை பெற்றவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று ரோகெட்டு கூறுகிறார். எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் ஒரு உண்மையான கிறிஸ்தவர் மகிழ்ச்சியுள்ள மனநிலையில் எப்பொழுதும் காணப்பட வேண்டும். இந்த மகிழ்ச்சியான, மன நிலைக்கும், உடல் நலத்திற்கும் தொடர்பு இருப்பதாக வசனங்கள் குறிப்பிடுகிறது. "கண்களின் ஒளி இருதயத்தைப் பூரிப்பாக்கும்; நற்செய்தி எலும்புகளைப் புஷ்டியாக்கும். " (நீதி 15:30)

நம்முடைய மனநிலையை மகிழ்ச்சியாய் வைத்திருப்பதின் மூலம் நம்முடைய உடல் நிலை மற்றும் உணர்வுகள் ஆரோக்கியமான நிலையை அடையும் என்று மருத்துவ சமுதாயம் கருதுகிறது. நம்முடைய சரீரத்தின் சகல உறுப்புகளுக்கும், இரத்தத்தை கொடுக்கக்கூடிய இருதயம், இதற்கு நியாயமான ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. ஒரு இருதயம் ஆரோக்கியமாக இராவிட்டால் சரீரத்தின் சகல உறுப்புகளுக்கும் போதிய இரத்தம் தொடர்ந்து செல்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். இதன் விளைவாக அநேக வேதனைகளும் வியாதிகளும் ஏற்படலாம். அநேகர் தங்களுடைய உணவை சரியான நேரத்தில் உட்கொள்ளாததினால் தங்களுடைய ஆரோக்கியத்தை இழந்து விடுகிறார்கள். ஆயினும் உடல் நலம் குறைவுள்ள சூழ்நிலைகளில் இப்படிப்பட்ட வைத்தியங்கள் மட்டுமே முழுமையாக குணப்படுத்த முடியும். அதிகமான இருதய நோய்களுக்கு மன அழுத்தமும் மகிழ்ச்சியில்லாத ஒரு நிலையுமே முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

மன அழுத்தம் இருதய நோயை அதிகரிக்குமேயானால், மகிழ்ந்து சிரிக்கக்கூடிய சிரிப்புகள் நிச்சயமாக இருதயத்தில் ஏற்படும் வலியை குறைக்கும் என்று Saturday Review பத்திரிகை ஆசிரியரும், எழுத்தாளருமான நார்மென் கூறுகிறார். அவர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு அவருக்கு மிக குறுகிய வாழ்நாள் மட்டுமே உண்டு என்று அவர் அறிந்தபோது, அவருக்குரிய வைத்தியத்தை அவரே செய்ய துவங்கினார். வைட்டமின் - சி (vitamin C) மாத்திரைகளை எடுத்துக்கொண்டு, பழைய நகைச்சுவை திரைப்படங்களை பார்த்து வந்தார். "10 நிமிடங்கள் வயிறு குலுங்க சிரிக்கும்பொழுது இருதயத்தின் வலி நீங்கி, இரண்டு மணி நேரம் அயர்ந்த நித்திரை பெற்றேன்" என்று அவர் கூறினார். மீண்டும் அவருக்கு அந்த வேதனை துவங்கும்போது அந்த படங்களைப் பார்த்து சிரிக்கத் துவங்கினார். இப்படியாக தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இருதய வலியை குறைத்துக் கொண்டார். 1979-ம் ஆண்டு அவர் எழுதின Anatomy of an Illness as Perceived by the Patient என்ற புத்தகம் மிக அதிகமாக விற்கப்பட்டது. மகிழ்ச்சியோடு சிரிக்கும்போது, இருதய நோய்கள் குணமடைவதற்கும் உள்ள தொடர்பை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து ஆராய்ந்து வந்தனர்.

ஒருவர் சிரிக்கும் பொழுது பிராணவாயு உள்ள இரத்தம் (oxynated blood) சரீர உறுப்புகளுக்குள் வேகமாக பாய்ந்து அதன் பலத்தையும், தரத்தையும் அதிகரிக்கிறது. அடிக்கடி வியாதி படக்கூடியவர்கள் மகிழ்ச்சியான எண்ணங்களை தங்களுக்குள் வளர்த்து, தங்களுக்குள் இருக்கும் வியாதியை மேற்கொள்ளலாம். கடமைக்காகவும் வெளித்தோற்றத்திற்காகவும், மகிழ்ச்சியாய் இருப்பது போல காட்சியளிக்கக்கூடிய காரியங்கள் தங்களுக்குரிய ஆரோக்கியமான உடல் நிலையை கெடுத்து விடும். இயல்பாகவே இவர்கள் சந்தோஷமான நிலையில் இருக்க வேண்டும். ஆரோக்கியமான உடல் நலத்திற்கும், சிறப்பான பிள்ளை வளர்ப்புக்கும் இப்படிப்பட்ட ஆலோசனைகள் கொடுக்கப்படுகிறது. இதைக் குறித்து நம்முடைய பாஸ்டர் ரசலின் வார்த்தைகளை கவனிக்கலாம்.

"சூரிய ஒளிக்கு பதிலாக மழை பெய்து கொண்டிருக்கலாம். ஒரு மந்தமான சூழ்நிலை தோன்றலாம். மழைக்காலம் அனைவருக்கும் ஆசீர்வாதங்களை கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. இவைகளை புரிந்து கொள்வதற்கு நம்முடைய சிந்தை ஆயத்தமாக இருக்கிறது. வெளியே சென்று விளையாட வேண்டுமென்று எதிர்பார்த்திருந்த ஒரு குழந்தை ஏமாற்றம் அடையும் போது, அதனுடைய தாய் பெய்ந்து கொண்டிருக்கும் மழையின் அழகையும், அதன் மூலமாக வளரக்கூடிய பூக்களையும், மரங்களையும் குறித்து எடுத்துரைத்து, அந்த குழந்தையின் கவனத்தை திசை திருப்ப வேண்டும். மேலும் நடமாடும் கால் நடைகளுக்கும் வளரக்கூடிய தானியங்களுக்கும், இது எவ்வளவு அவசியமாக

இருக்கிறது என்பதை கூற வேண்டும். பிள்ளைகள் வியாதிப்படும்போதும், அவர்கள் உடல் நலம் குறையும் போதும் பெற்றோர்கள், அவர்களை இன்னும் மோசமான நிலைக்கு ஆளாக்கி விடாமல் அவர்களுடைய மனநிலையை வேறு நன்மையான காரியங்களுக்கு திசை திருப்பி சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும், அவர்களுக்குள் வளர்த்து அவர்களுடைய உடல் நல குறைவுகளை முடிந்தவரை நிவர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். " (6ம் தொகுப்பு 550, 551)

ஆவிக்குரிய கோணத்தில் நாம் பார்க்கும் பொழுது, இந்த மன மகிழ்ச்சி அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளின் ஆரோக்கியத்திற்கு நேரடியாக தொடர்பு உடையதாயிருக்கிறது. நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய ஊழியத்தின்போது அவருடைய உடன்படிக்கையின் பொருத்தனைகளை நிறைவேற்றக்கூடிய கடுமையான அனுபவங்களின் மத்தியில் மிகக் குறைவான நேரங்களிலும், மகிழ்ச்சியாய் இருந்தார். "அப்பொழுது நான். இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்."(சங் 40:7,8) என்ற தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றும்படியாக ஞானஸ்நானத்தின் போது தன்னுடைய பலியின் பயணத்தை துவங்கினார்.

அவர் சாத்தானை மேற்கொண்டு எளிதாக ஜெயித்ததின் இரகசியம் என்னவெனில் - தேவனுடைய சித்தத்தை எல்லா நிலைகளிலும் மகிழ்ச்சியோடும், முழு விருப்பத்தோடும் நிறைவேற்றி தனக்குள் இருந்த விசுவாசத்தை நிரூபித்தார். தனக்கு எதிராக செயல்பட்ட சதுசேயர்கள், பரிசேயர்கள் குவித்த குற்றச்சாட்டுகளை அவர் எப்பொழுதும் பொருட்படுத்தவில்லை. ஆகவே தேவனுடைய சித்தத்தை செய்யக்கூடிய மகிழ்ச்சியில் அவர் எப்பொழுதும் குறைவு படவில்லை. இதற்கு அடிப்படையான ஒரு காரணம் தேவை. இயேசுவை பொருத்தவரையில் தேவனுடைய பிரமாணத்தையும், சித்தத்தையும், நோக்கத்தையும் அவருடைய இருதயத்தில் கொண்டிருந்ததினால் அவைகளை நிறைவேற்றுவதில் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். தேவனுடைய இருதயத்திற்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஊழியத்தை செய்வதில் இயேசு சந்தோஷம் அடைந்தார். அவர் இந்த உலகத்திற்கு மனுஷனாக வருவதற்கு முன் தேவனுடைய சமூகத்தில் நித்தமும் அவருடைய மனமகிழ்ச்சியாய் இருந்தார் என்று வாசிக்கிறோம். (நீதி 8:30)

பரிபூரண மாம்சத்தில் பூரண இருதயத்தின் வழியாக தேவனிடம் தொடர்பு கொண்டிருந்த இயேசுவின் ஜெபங்கள் எப்பொழுதும் கேட்கப்பட்டது என்ற உறுதியை பெற்றிருந்தார். இப்படிப்பட்ட உறுதியை பெற்றிருந்த இயேசு எவ்வளவு மன மகிழ்ச்சியாய் இருந்திருக்கக் கூடும். மேலும் இந்த மனுகுலத்திற்காக அவர் தேவன் கொடுத்திருந்த பணியை சிறப்பாக நிறைவேற்றி முடித்ததால் அவருக்கு தெய்வீக நிலைமை வாக்களிக்கப் பட்டிருந்தது. இந்த வாக்குறுதியை உணர்ந்த இயேசு எவ்வளவாய் சந்தோஷப்பட்டிருப்பார். ஆகவே அவர் மாம்சத்தில் இருந்தபோதே "ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக் கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும் படி அருள்செய்திருக்கிறார்." (யோவா 5:26) என்று கூறினார்.

விசுவாசிகள் தேவனிடத்திலிருந்து அநேக இரக்கங்களையும், கிருபைகளையும் பெறுகிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்தை நஷ்டப்படுத்தாமல், கடுமையான சோதனைகளிலும் நாம் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு தேவன் அநேக வாக்குறுதிகளை கிருபையாய் கொடுத்திருக்கிறார். நீதிமானாக்கப்பட்ட நிலைமை, ஆவியினால் ஜெநிப்பித்தல், தெய்வீகத்திட்டத்தின் அறிவு, சீஷத்துவம், மறுரூபமாக்கப்பட்ட மனநிலை, தேவனிடத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள், மன்னிப்பு, ஊழியத்தின் வாய்ப்புகள், ஐக்கியம், காவல் தூதர்கள் போன்ற அநேக சிலாக்கியங்கள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பிதாவின் கிருபைகளும், அன்பும், நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்தை வளர்ச்சிக்குள்ளாக்கி, ஆவிக்குரிய சந்தோஷத்தை அதிகரிக்கும்.

* **நீதிமானாக்கப்பட்ட நிலையானது,** நம்மை தேவனுக்கு முன்பாக இந்த உலகத்தின் மனுகுலத்திலிருந்து பிரித்து, தேவனுடைய புத்திரர்களாக கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை மூடினவர்களாக நிற்கக் கூடிய நிலையைப் பெறுவது, எவ்வளவு பாக்கியம். நம்முடைய நேசரின் ஈடுபலியின் அறிவைப் பெற்று இவ்வளவு உயர்வான நிலைமைக்கு உயர்த்தப்பட்டது எவ்வளவு அரிதான காரியமாயிருக்கிறது. (ரோம 8:11-33, 34)

* **ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு,** மரணபரியந்தம் நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டால், திரைக்கு அப்பால் தேவனுடைய சமூகத்தில் தெய்வீக சுபாவத்தைப் பெறுவோம். பூமியின் முழு குடும்பத்திற்குள்ளும் மறைந்திருக்கக்கூடிய சகல உண்மைகளையும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் உணர்ந்து

கொள்ளலாம். உண்மையில் இது எவ்வளவு மகிழ்ச்சி தரக்கூடிய காரியமாயிருக்கிறது. (ரோம 8:14-17, 1கொரி2:12,14)

* **தேவனுடைய திட்டத்தின் அறிவின்** மூலமாக சபைக்கு மாத்திரமல்ல இந்த முழு மனுக்குலத்திற்கும் தேவன் வைத்திருக்கக்கூடிய ஆச்சரியமான காரியங்களின் தொகுப்பை நாம் காணக்கூடியவர்களாய் இருக்கிறோம். இவைகளை காணாதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் குருடாக்கின மனுக்குலம் ஆதரவற்ற சூழ்நிலையில் இருக்கும் பொழுது, நாம் எப்படிப்பட்ட அறிவை பெற்றிருக்கிறோம் என்று சிந்திக்கும்போது நாம் எவ்வளவு பாக்கியமுள்ளவர்களாக இருக்கிறோம். (யோவான் 8: 38, மத் 13:10-17)

*கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி தேவனுடைய இராஜ்யத்தில் கிறிஸ்துவோடு கூட இராஜாக்களும். ஆசாரியர்களுமாக இருப்பதற்கான **சீஷர்களுக்குரிய** அழைப்பு சுவிசேஷ யுகத்திற்கு முன் கொடுக்கப்படவில்லை. மேலும் இந்த வாய்ப்பு இந்த யுகத்தோடு முடிவடைகிறது. சிறு மந்தையின் ஒரு அங்கமாக இருப்பதற்காக நமக்கு கொடுக்கப் பட்டுள்ள இந்த மாபெரும் அழைப்பும், வாய்ப்பும் எவ்வளவு மகத்துவமுள்ளது. (மத் 16:24 லூக் 12:32)

***மறுரூபம் ஆக்கப்பட்ட மனது -** நம்முடைய வாழ்க்கையில் நாம் பாவத்திற்கு ஊழியம் செய்யாமல், தேவனுடைய சித்தத்தை செய்ய வழிநடத்தும். வசனங்களினால் நாம் போஷிக்கப்படும்பொழுது அவைகளின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தி ஆண்டவராம் இயேசுவின் குணலட்சனங்களை நடைமுறைப்படுத்தி பிரதிபலிப்போம். இவைகளை நம்முடைய சகோதரர்களிடமும் பிரதிபலித்து நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் குணலட்சணங்களையும் பிரதிபலிப்போம். (ரோம 12:2, கலா 5:22,23)

* **ஜெபம் -** நமக்கு ஆறுதல் தரக்கூடிய ஒரே காரியம். நாம் பல சோதனைகளிலும், வேதனை களிலும் அகப்பட்டாலும் நாம் தேவனோடு கொண்டுள்ள தொடர்பினால், தேவனுடைய வல்லமையினால் பலம் கொண்டு சகலத்தையும் மேற்க்கொள்கிறோம். இதனால், நம்முடைய மனம் மிக அமைதலோடு காணப்படுகிறது. (யோவ 15:7)

* தேவன் நமக்கு கொடுப்பேன் என்று வாக்களித்த **மன்னிப்பானது,**நமக்குள் இருக்கக் கூடிய சோர்வுகளையும், தளர்ச்சிகளையும், அகற்றிவிடுகிறது. ஏனெனில் நம்முடைய மாம்சம் பலவீனமானது தொடர்ந்து நாம் தோல்விகளை தழுவக்கூடியவர்கள் என்று அறிந்திருக்கிறோம். எனவே நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆரோக்கியமாக வளர்ச்சியடைய தேவன் அநேக வாக்குறுதிகளை கொடுத்திருக்கிறார். (1யோவ 1:9, நீதி24:16)

*ஊழியத்திற்கான வாய்ப்புகள் - ஆண்டவருடைய திராட்ச தோட்டத்தில் நமக்கு அதிகமாக வாய்ப்பளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வேலைகளுக்கு நாம் செய்யும் உதவிகள், கொடுக்கப்படும் ஆறுதல்கள் மற்றும் நாம் செய்யக்கூடிய உற்சாகமான காரியங்களே, நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பை அளவிடுகிறது. நம்முடைய சகோதரர்களுக்கு, பிதாவின் அனுமதியோடு நாம் செய்யும் உதவிகளும் அதனால் நாம் பெறும் மகிழ்ச்சியும், நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு ஒரு தகுந்த ஆதாரமாகக் காணப்படுகிறது.

*சகோதர ஐக்கியம் - நம்முடைய பிதா, ஆண்டவராம் இயேசு மற்றும் சகோதரர்களோடு நாம் கொண்டுள்ள ஐக்கியத்தை குறிக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தைகளை தியானித்து, பரிசுத்தமான காரியங்களை சிந்தித்து கொண்டிருந்தால், நம்முடைய வாழ்க்கையில் தெய்வீக பிரசன்னத்தை உணரலாம். இதுவே நித்தியமாக நாம் ஊக்குவிக்கப்படுவதற்கான ஊற்றாயிருக்கிறது. (1யோவ 1:6,7, அப் 2:42)

*காவற்தூதர்கள் - நம்மை சுற்றி இருக்கும் தீமைகளிலிருந்து நம்மை பாதுகாப்பதற்கு நமக்கு கண்ணுக்கு தெரியாத காவற் துாதர்கள் உண்டு. இந்த பாதுகாப்பை நாம் சரியாக புரிந்து கொண்டால், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முயற்சித்து, விசுவாசத்தோடு நடக்கும் போது வரும் தேவையற்ற பயங்கள் குறையும். இப்படியாக நம்மை மிக கவனத்தோடு வழிநடத்தக்கூடிய நம்முடைய தேவனை ஆராதிக்காமல் எப்படி இருக்க முடியும் ? (சங் 34:7, மத் 18:10)

பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, உட்காவல் அறையில் வைக்கப்பட்டபோது இவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி மேற்கூறப்பட்ட சகல ஆசீர்வாதங்களையும் பெற்றவர்களாய் மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தார்கள். இனிவரக்கூடிய காரியங்களைக் குறித்து குறிசொன்ன ஒரு ஸ்தீரியிடமிருந்து, பிசாசை விரட்டின போது இச்சம்பவம் நடந்தது. இதன் விளைவாக அந்த ஸ்தீரியினால் பயன் பெற முடியாத முதலாளிகள் பவுலையும், சீலாவையும் சிறையில் அடைத்தனர். "அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப்பெற்று, அவர்களை உட் காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத்

தொழுமரத்தில் மாட்டி வைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்."(அப் 16:23-25) இப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலைகளிலும், அவர்கள் பெற்ற மனமகிழ்ச்சி அவர்களுடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்தைக் குறித்து பல தொகுப்புகள் பேசுகிறது. அவர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருக்கக்கூடிய ஆவியைப் பெற்றிருந்தார்கள். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்." (பிலி 4:4) என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. "( யாக் 1:2-4) என்று யாக்கோபு எழுதினார். தேவனுடைய இராஜ்யத்தில், மனுக்குலத்தை தேவனோடு ஒப்புரவாகுதலின் ஊழியம் செய்வதற்கு இந்த யுகத்தில் ஆயத்தப் பட்டிருக்கக்கூடிய நமக்கு, எப்பொழுதும் மனமகிழ்ச்சியாக இருக்கக்கூடிய குணம் எவ்வளவு அவசியமானது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கல்லறையிலிருந்து எழுந்திருக்கும் விழுந்துபோன மனுக்குலம், அதே சிந்தையோடு எழுந்திருப்பார்கள்.மனுக் குலத்திற்காக தேவன் வைத்திருக்கும் திட்டத்தின்படி, அவர்கள் அனைவரும் பரிபூரண நிலையை அடைவதற்கு, பெரும்பாதையான வழியில் நடத்துவதே, இயேசுவின் சரீர அங்கத்தினர்களுக்கு மகிழ்ச்சியின் எல்லையாக இருக்கும்.

ஆயிர வருட ஆட்சியின் நியாயத்தீர்ப்பின் காலத்தின் போது, பூமியிலுள்ள மனுக்குலம் படிப்படியாக உயிர்த்தெழுதல் அடைவார்கள். பரிசுத்தமான பெரும் பாதையில் அவர்களை நடத்துவதற்கு அதிகமான கல்வி அறிவும், ஆலோசனைகளும் மிக அவசியமாய் தேவைப்படும். ஏனெனில் அந்த ஆயிர வருடத்தின் முடிவில் சாத்தான் கட்டவிழ்க்கப்படும் பொழுது அவனுடைய வஞ்சனைகளிலிருந்து இவர்கள் அனைவரும் தப்பித்துக் கொள்வதற்கு ஏதுவாக சிறப்பாக ஆயத்தப்பட வேண்டும். அந்த இராஜ்யம் இருப்புக் கோலினால் ஆட்சி செய்யப்பட்டாலும் இரக்கத்தினாலும் , கிருபையினாலும் நீதி நிறைவேற்றப்பட்டாலும் மனப்பூர்வமாய் விருப்பமுடையவர்கள் மட்டுமே ஜீவ தண்ணீரைப் பருக அழைக்கப்படுகிறார்கள். (வெளி 22:17)

நமக்குள் சந்தோஷமான மனநிலையை தக்க வைத்துக்கொள்வது ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு உதவியாக இருக்கும். நாம் அழைக்கப்பட்ட அழைப்பில் விசுவாசம் உள்ளவர்களாக நிலைத்திருப்பதற்கு கிறிஸ்தவர்களுக்கு இந்த ஒரு குணம் மிக அவசியமானது. நம்முடைய சோர்வுகளை மேற்கொள்வதற்கு, நாம் எடுக்கக்கூடிய எந்த முயற்சிகளும், நம்முடைய ஜெப வாழ்க்கையோடும், தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களை தொடர்ந்து நினைவில் வைத்தவர்களாகவும் போராட வேண்டும். இப்படியாக நம்முடைய உடன்படிக்கையின் பொருத்தனைகளை நாம் நிறைவேற்றி, கேட்கக் கூடிய காதுகளைப் பெற்று, நம்முடைய விசுவாசமுள்ள சகோதரர்கள் மத்தியிலும் சாட்சி பகர வேண்டும். இவை எல்லா காரியங்களிலும் நாம் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், ஏதேனில் தொலைக்கப்பட்ட பூரண நிலைமையை இந்த மனுக்குலம் பெறுவதற்கு நாம் மகிழ்ச்சியோடு தேவ பணியில் இணைந்து செயல்படலாம். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். " (யோவா 16:33) என்று நம்முடைய ஆண்டவருடைய வார்த்தையினால் உற்சாகத்தைப் பெற்று இந்த உலகத்தை ஜெயிக்கலாம்.

பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல்



# ஸ்நானம்

"கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். "(எபேசியர் 5:25, 26)

**Brent Hislop**

தாவீது தன்னுடைய பாவங்களை உணர்ந்தபோது, தேவனுடைய இரக்கங்களுக்காக மன்றாடின மன்றாட்டை 51-ம் சங்கீதம் குறிப்பிடுகிறது." நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்." (சங் 51:7) என்று தாவீது தேவனுடைய மன்னிப்புக்காக வேண்டினார். குஷ்டரோகத்தை சுத்திகரிப்பதற்கு அன்று ஆசாரியர்கள் செய்திட்ட சடங்குக்கு ஒப்பாக, தாவீது தம்முடைய பாவங்களை போக்குவதற்காக விண்ணப்பித்தார். "உயிருள்ள குருவியையும், கேதுருக் கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் எடுத்து, இவைகளையும் உயிருள்ள குருவியையும் ஊற்று நீர்மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து, குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன் மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம்பண்ணி, உயிருள்ள குருவியை வெளியிலே விட்டுவிடக்கடவன். சுத்திகரிக்கப படுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் மயிர் முழுவதையும் சிரைத்து, தான் சுத்தமாகும்படி ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, பின்பு பாளையத்தில் பிரவேசித்து, தன் கூடாரத்துக்குப் புறம்பே ஏழுநாள் தங்கி," (லேவி 14:6-8)

தங்களுடைய பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டதை கிறிஸ்தவர்கள் நிச்சயமாக தங்களுடைய வாழ்க்கையில் உணர்கிறார்கள். "அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். "(1யோவ 1:7) இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்து, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக உயிர்த்து எழுப்பப்பட்டார் என்று அப்போஸ்தலராகிய பவுல் கூறுகிறார். (1கொரி 15:3, ரோம 4:25)

விசுவாசத்தின் மூலமாக தேவனால் நீதிமானாக்கப்பட்டோம் (ரோம 8:33,5:1) இது ஒரு கிறிஸ்தவரின் ஆரம்ப அனுபவம் மட்டும் அல்ல, நீதிமானாக்கப்பட்ட நிலையை, நம்முடைய வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும். துவக்கத்தில் நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டால் மட்டும் போதாது. நாம் தொடர்ந்து செய்கிற பாவங்களும் கழுவப்பட வேண்டும். தேவனால் பிறந்தவன் பாவம் செய்யான் என்று யோவான் கூறுகிறார். (1யோவ 3:9, 5:18) ஆயினும் இந்த விசேஷித்த பொக்கிஷமான புது சிந்தையை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம், என்பதை நம்மைக் குறித்து வசனங்கள் மூலமாக அறிந்து கொள்கிறோம். ஆகையால் தொடர்ந்து, பழைய மனுஷனுடைய பாவ வழிகளை அகற்றி, புதிய மனுஷனுக்குரிய ஆவிக்குரிய கனிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். (11கொரி 4:7, கொலோ 3:1-15) கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் புது சிருஷ்டி பாவம் செய்வதில்லை, ஆனால் பழைய மாம்ச இயல்புகள் அகற்றப்படுவதற்கு காலம் செல்லும். ஆகவே பாவத்திற்கும் சகல தீமைக்கும் நாம் மரித்தவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். (கொலோ 3:5)

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக் கிறார்.நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். "(1யோவ 2:1,2) என்று யோவான் எழுதினார். யோவானுடைய வார்த்தைகளை புரிந்து கொள்வதற்கு "இந்த காரியங்களை " குறித்து முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அடுத்து நாம் பாவம் செய்யும் பொழுது இயேசு நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார் என்பதன் பொருளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

### இந்த காரியங்கள்

"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற

விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென் போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களா யிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது."(1யோவான் 1:5-10) இவைகளை யோவான் "இந்த காரியங்கள்" என்று குறிப்பிடுகிறார்.

நாம் பாவம் செய்வதற்காக யோவான் இக்காரியங்களை சொல்லவில்லை. ஏனெனில் நாம் அனைவரும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு வெளிச்சத்தில் நடந்து, தேவன் நமக்காக வைத்திருக்கக்கூடிய அவருடைய சித்தத்தை அறிய வாஞ்சையாய் இருக்கிறோம். இதோடு கூட நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால் தேவன் நம்மை மன்னிக்க நீதியுள்ளவராக இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையை சுத்திகரிக்கக்கூடிய இரண்டு கோட்பாடுகளை யோவான் குறிப்பிடுகிறார். 1. ஒளியில் நடந்து, 2. பாவங்களை அறிக்கையிடுதல். நாம் தேவன் விரும்பும் சரியான காரியங்களை செய்வதற்கு முயற்சிக்க வேண்டும், அவைகளை நாம் சரியாக நிறைவேற்றாத பட்சத்தில் நாம் அதை ஒத்துக்கொள்ள வேண்டும்.

அறிக்கையிடுதல் என்ற கிரேக்க வார்த்தை "ஒத்துக்கொள்ளுதல்" அல்லது "அதே வார்த்தைகளை பேசுதல்" என்று பொருள். ஜலத்தினால் கழுவி சுத்திகரிக்கப்படுதல் என்ற காரியம் தேவனுடைய வார்த்தைகளினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்வதை இதற்கு ஒப்பாக சொல்லப்படுகிறது. தேவனுடைய வார்த்தைகளினால் அவரை நாம் புரிந்து கொள்வதினால், தேவனிடத்தில் நாம் எவ்வளவு நெருங்கி இருக்கிறோம் என்பதையும், தேவனுடைய நீதியுள்ள நிலைமைகளை நாம் எந்தளவு கடைபிடித்திருக்கிறோம் என்றும் நம்முடைய தவறுகளை தெளிவாக அறிந்து, அவைகளை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு, தேவனுக்கும் மற்றவர்களுக்கும் முன்பாக அதை அறிக்கையிட வேண்டும்.

**பரிந்து பேசுகிறவராகிய இயேசு**

தம்முடைய பிதாவினிடத்தில் இயேசு நமக்காக பரிந்து பேசுவது ஒரு சுவாரஸ்யமான காரியம். இதைக் குறித்து அநேகர் பல காரியங்களை பேசியிருக்கிறார்கள். "பாராக்கிலிட்டோஸ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "பரிந்துபேசுவது" என்று வார்த்தை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு "ஒருவருக்கு உதவி செய்யும்படி அழைக்கப்படுபவர்" என்று பொருள். குற்றம் சாட்டப்பட்டவருக்காக நீதிபதியினிடம் பரிந்து பேசக்கூடிய வக்கீல், தன்னுடைய கட்சிக்காரருக்காக வாதாடுகிறார். அதே நேரத்தில் இயேசு கிறிஸ்து நமக்காக பரிந்துபேசுவதற்கு அவசியமில்லை என்று தோன்றலாம். ஏனெனில் நம்முடைய பாவத்தைக் குறித்து நாம் அறிந்திருக்கிறோம். நம்முடைய பாவத்தை மேற்கொள்வதற்கு அவருடைய உதவியை நாடுகிறோம். அவருடைய நாமத்தில் பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும் பெற்றுக் கொள்வோம் என்று இயேசு கூறியிருக்கிறார். (யோவ14:13,14) தேவைப்படும் போதெல்லாம் தைரியத்தோடு கிருபாசனத்தண்டையில் வரும்படி அப்போஸ்தலர் கூறுகிறார். (எபிரெ 4:16) இவையெல்லாம் இயேசுவின் நாமத்தினாலே செய்யப்படுகிறது. தொடர்ந்து இவருடைய இரத்தத்தினால் நாம் கழுவப்பட்டு, தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

சபை வளர்ச்சி அடைவதற்கு இயேசு கிறிஸ்து முழுமையாக முயற்சித்து கொண்டிருக்கிறார். சத்தியமாகிய தண்ணீரினால் சபையை கழுவி சுத்திகரித்துக் கொண்டிருக்கிறார். கரை திரை அற்றவர்களாகவும் பரிசுத்தமுள்ள சபையாக தேவனுக்கு முன்பாக நிறுத்துவதற்கு இயேசு வழி நடத்துகிறார். (எபே 5:26, 27)

பாவங்களை அறிக்கையிடாமல் ஒருவரும் பாவமன்னிப்பை பெறுவதில்லை."தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்." (சங் 19:12, 13) என்ற சங்கீதகாரருடைய வார்த்தைகளை கவனிக்கவேண்டும்.

நாம் அபூரணராக இருப்பதினால் நம்முடைய தவறுகளையும் வீழ்ச்சிகளையும் குறித்து நாம்

எவ்வாறு அறிந்துகொள்வது ? நாம் மறைமுகமான குற்றங்களிலிருந்து விடுபடுவதற்கு தேவனிடம் ஜெபிக்கிறோம். பாவத்திலிருந்து எங்களை கழுவியருளும் என்று துணிகரமாக சங்கீதக்காரன் கூறாமல் அவைகளிடமிருந்து விலக்கி இரட்சிக்க வேண்டும் என்று வேண்டுகிறார். துணிகரமான பாவம் என்பது, பாவம் என்று நன்கு அறிந்து, இறுமாப்புக்கொண்டு, துணிந்து செயல்படக் கூடியதாகும். அறியாமையில் செய்யக்கூடிய பாவங்கள் தீமையல்ல. தேவன் அவைகளை மன்னிப்பார். ஆனால் தேவனுடைய சித்தத்தை அறியாமல் சரியான ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலும் , ஜெபமும் இல்லாத பட்சத்தில் நாம் வெளிச்சத்தில் நடப்பதற்கு தவறி மரணம் வரைக்கும் பாவத்தில் நிலைத்திருக்கும் கொடூரமான வழியில் செல்வோம்.

"என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்." (சங் 51:2) என்று தாவீது எழுதினார். தாவீதின் பாவங்கள் மிகக் கொடியதாய் இருந்தது. தன்னுடைய குற்றங்களை பாராதபடிக்கு பார்வையற்ற நிலையில் தாவீது இருந்தார். நாத்தான் தீர்க்கதரிசியின் மூலம் தேவன் அவரை எச்சரிக்கும் வரைக்கும், தாவீது தன்னுடைய குற்றங்களை உணராமலும் அதற்காக மனம் வருந்தாமலும் இருந்தார். 32 மற்றும் 51-ம் சங்கீதங்கள் அவருடைய பாவமான வாழ்க்கையில் நடந்த சம்பவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இந்த இரண்டு சங்கீதங்களையும், ஆராய்ந்து பார்த்தோமானால், மனம் வருந்துதல் மற்றும் பாவமன்னிப்பைக் குறித்து எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

உரியாவின் குற்றமற்ற இரத்தத்திற்கு உட்பட தாவீது தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு மனம் வருந்தினார். (சங் 51:14) அவருடைய அநீதியினிமித்தம் அவர் மௌனமாயிருந்ததற்காக மனம் வருந்தினார். (சங் 32 :3,4) தாவீது தேவனுக்கு விரோதமாக குற்றம் செய்தார் என்று உணர்ந்து (சங் 51:4) தேவனிடத்தில் இரக்கத்தை பெறும்படி வேண்டினார். தாவீதின் குற்றங்கள் அகற்றப் பட்டதினால் அவர் மரணத்திற்கு தப்புவிக்கப்பட்டார் என்று நாத்தான் கூறினார். (11சாமு 12:13) ஆனால் தாவீது தன்னுடைய பாவங்களினிமித்தம் அதிகமான இழப்பை சந்தித்தார். அதோடு பத்சேபாள் இடத்தில் தான் பெற்ற முதல் பிள்ளையையும் இழந்தார். அதற்கு பின் தாவீதின் மரணம் வரைக்கும் அவருடைய வீட்டில் சமாதானம் காணப்படவில்லை. தாவீதின் பாவங்கள் மன்னிக்கப்பட்டாலும் அவர் செய்த பாவங்களின் பின் விளைவுகள், மிக கொடூரமாய் இருந்தது. அவர் விதைத்ததை அறுத்தார். நீண்ட காலம் கசப்பான காரியங்களை அறுவடை செய்தார்.

நம்முடைய கிரியைகளுக்கு உண்டான பலன்களைக் குறித்து தாவீதின் அனுபவங்கள் நமக்கு முக்கியமான பாடங்களை கற்பிக்கிறது. நாம் செய்த தவறுகளுக்கு தேவனிடத்தில் மன்னிப்பைப் பெறலாம். ஆனாலும் அந்த பாவ கிரியைகளிலிருந்து நாம் முழுமையாக சுத்திகரிக்கப்படுவதற்கு நிச்சயமாக நாம் பல கடுமையான அனுபவங்களை பெற வேண்டியதாயிருக்கும். நம்மை நாம் வஞ்சித்து தேவனை பரியாசம் பண்ண இயலாது. நாம் விதைப்பதை நிச்சயமாக அறுவடை செய்ய வேண்டும். (கலா 6:7)

"எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்." (சங் 32:2) என்று தாவீது கூறுகிறார். நாம் தேவனிடத்தில் எதையும் மறைக்க முடியாது. தேவனுக்கு முன்பாக நம்மைநாம் நீதியுள்ளவர்களாக காண்பித்து கொள்ள வகை தேடினோமானால், நம்மை நாம் வஞ்சித்து கொள்பவர்களாய் இருப்போம். நாம் பார்த்த இரண்டு சங்கீதங்களிலும் தாவீது தன்னுடைய ஆத்துமாவை முழுமையாக ஒப்புக்கொடுத்து, தேவனுடைய இரக்கங்களுக்காகவும் , மன்னிப்புக்காகவும் மன்றாடினார். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்."(சங் 51:10-12) என்றும் தாவீது எழுதினார். புதுப்பிக்கப்பட்ட இந்த ஆவியோடு தேவனுடைய வழிகளில் நடப்பேன் என்று தொடர்ந்து கூறுகிறார்.

"நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்."(சங்32:8) என்ற வசனம் இதற்கு இணையாக காணப்படுகிறது என்று பலர் எண்ணுகிறார்கள். இதை தாவீதினிடத்தில் தேவன் பேசுகிறார் என்று நினைப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் தாவீது தன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய வழி நடத்துதலை பெற்று அவரால் கற்பிக்கப்படக்கூடிய காரியங்கள் விவரிக்கப் படுகிறது.

"பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.தேவனுக்கேற்கும் பலிகள்

நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங் 51:16-19) என்று தாவீது எழுதினார். தேவன் தம்மை கழுவி சுத்திகரித்தால், தேவனுடைய இரட்சிப்பைப் பெற்று அவருடைய மகிழ்ச்சியிலும், சந்தோஷத்திலும் நிலைத்திருப்பதற்கு தாவீது வாஞ்சித்தார். (சங் 51:7-12)

**பாவிகளும் நீதிமான்களாகலாம்**

தேவனை நேசிக்கக்கூடிய நீதிமான்களுக்கும் மற்றும் துன்மார்க்கமான பாவிகளுக்கும் உள்ள வேறுபாட்டை தாவீது இந்த சங்கீதங்களில் காட்டுகிறார். தாவீது பாவம் செய்திருந்தாலும் அதை அவர் அறிக்கையிட்டு மனம் வருந்தி, அவர் தேவனை அதிகமாய் நேசிப்பதை நிரூபித்தார். அவர் துணிகரமான பாவங்களை செய்யக்கூடிய ஒரு துன்மார்க்கமான மனுஷன் இல்லை என்பதை அறிவித்தார். தாவீது தேவன் மேல் விசுவாசமாய் இருந்தார். அவர் எல்லாவற்றிருக்கும் தேவனுடைய பலத்தை சார்ந்திருப்பதை விசுவாசித்தார்.

"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்." (சங்51:10-12) என்று தாவீது குறிப்பிடுகிறார். தேவனுடைய நீதிக்கு மனப்பூர்வமான கீழ்ப்படிதலை காட்டுவதற்கு தேவனுடைய பரிசுத்த ஆவியை பெறவேண்டும் என்று தாவீது மன்றாடினார்.


கிறிஸ்தவர்களுக்கு அருமையான ஒரு பாடம் இதில் அமைந்துள்ளது. நம்முடைய முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும், இருதயத்தோடும் சிந்தையோடும், தேவனை நேசித்தாலும் நாம் தவறி பாவம் செய்துவிடுகிறோம். நீதிமான் ஏழு முறை விழுந்தாலும் எழுந்திருப்பான் என்பதை அறிந்திருந்தாலும் (நீதி 24:16) நாம் அடையும் தோல்விகளினால் சோர்ந்து போய் விடக்கூடாது. தாவீதின் பாவங்களுக்காக அவர் மனம் வருந்திய காரியம் - நமக்கு முன் வைக்கப்படும் அற்புதமான மாதிரியாக இருக்கிறது. தன்னுடைய பாவங்களிலிருந்து விடுபட அவர் செய்த ஜெபங்கள் நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகவும் இருக்கிறது. நாம் தேவனை விசுவாசிக்க வேண்டும். நமது பாவங்களுக்காக அவர் வாக்களித்த மன்னிப்பையும் பெறுவோம் என்று விசுவாசிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் கிருபைகளையும் விசுவாசிக்கவேண்டும். தேவனுடைய நீதிக்கு மனப்பூர்வமாக நாம் கீழ்ப்படிவோம் என்பதற்காக தேவன் அவருடைய ஆவியை நமக்குள் புதுப்பிப்பார் என்பதையும் விசுவாசிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தங்களுடைய நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் ஜீவித்து, தங்களுடைய சகல பாவங்களையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சுத்திகரிக்கும் என்ற விசுவாசத்தோடு தேவனிடத்தில் நம்முடைய பாவங்களை அறிக்கையிட வேண்டும். அப்பொழுது தேவன் நமக்கு மன்னிப்பளித்து சகல பாவங்களிலிருந்தும், அநீதிகளிலிருந்தும் சுத்திகரிப்பார். (1யோவா 1:9)

இந்த வளர்ச்சிக்குரிய செயல்முறை வேதனை தரக்கூடியதாயிருப்பினும், நாம் இயேசுவை நம்முடைய சார்பில் அழைத்து நமக்கு உதவி செய்யவும், அவரிடத்தில் சமாதானத்தை பெறவும் நம்முடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலை அளிக்கவும், நாம் அவரை அழைத்து கொள்ளலாம். அப்பொழுது சத்தியமாகிய ஜலத்தினால் நம்மை சுத்திகரித்து, நம்மை தூய்மைப்படுத்துவார். நாம் சந்திக்கக்கூடிய தோல்விகளை நமக்கேற்ற பாடங்களாக தேவன் அனுமதிப்பார். இவைகளை சரியான முறையில் புரிந்து கொண்டால், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி அடையலாம். நாம் தவறும் போது நம்முடைய தனிப்பட்ட அனுபவங்களில்- பாவத்தின் இருளையும், நீதியின் சிறப்பையும் அதிகமாக உணர்ந்து, ஆண்டவருக்குள் இருக்கும் பரிசுத்தமுள்ள காரியங்களை பெற்றுக்கொள்வதற்கு நாம் இரட்டிப்பாக முயற்சிக்க வேண்டும். நாமும் தாவீதைப் போல கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு தேவனுடைய இரக்கத்தையும்,கிருபையையும் முன்னிட்டு அவரை மகிமைப்படுத்தக்கடவோம்.

தரிசிப்பதற்கும், பலத்திற்கும்

# சூரிய ஒளி



"தேவனாகிய கர்த்தர் (யேகோவா) சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் (யேகோவா) கிருபையையும் மகிமையையும் அருளுவார்..."(சங் 84 :11)

**James Parkinson**

நம்முடைய உடல் ரீதியான ஆரோக்கியத்திற்கும், ஆவிக்குரிய நலனுக்கும், சூரிய ஒளி மிக அவசியம். நாம் செய்யக்கூடிய காரியங்களை பார்ப்பதற்கும், போக வேண்டிய வழிகளை அறிவதற்கும், உடல் நல ஆரோக்கியத்திற்கும் சூரிய வெளிச்சம் அவசியமாக தேவைப்படுகிறது. இவைகளை நாம் புரிந்து கொண்டால், ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு அடையாளமாக சொல்லப்படும் சூரிய வெளிச்சம் எவ்வளவு அவசியம் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

நம்முடைய வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடிய அதிகபட்சமான ஒளியை சூரியன் மட்டுமே கொடுத்து வருகிறது. நிலக்கரி மற்றும் வேறு எந்த எரிபொருள்களையும் பயன்படுத்தி வெப்பத்தை பெற முடியாது. இவைகளை பயன்படுத்தி மின்சாரத்தையும், செயற்கையான ஒளியையும் உருவாக்குகிறோம். ஆனால், திடீர் என்று சூரியன் மறைந்துவிட்டால் இந்த பூமி உறைந்துவிடும். வீசக்கூடிய காற்று திரவ நிலையை அடைந்து, காலப்போக்கில் உறைந்துவிடும். சகல உயிரினங்களும் மரித்துவிடும். மேலும், இந்த சூரிய ஒளியினால் நம்முடைய உணவுப் பொருட்களை பூமியிலிருந்து பெறுகிறோம் மற்றும் இந்த சூரிய வெளிச்சத்தினால் நம்மை சுற்றியுள்ள காரியங்களை நம்முடைய கண்களினால் காண்கிறோம். நாம் பயன்படுத்தக்கூடிய பொருட்களை, பார்த்து தேர்வு செய்கிறோம். இதினிமித்தம் அநேக காரியங்களை கற்று அறிகிறோம்.

சூரிய ஒளியினால் நமக்கு நேரிடையான பயன்களும் உண்டு. சூரியனிலிருந்து வரக்கூடிய அல்ட்ரா வைலட் கதிர்கள் நம்முடைய தோலின் கீழ் வைட்டமின் - டி - யை உற்பத்தி செய்யக்கூடிய கால்சியம் மற்றும் பாஸ்பரஸை தருகிறது. நம்முடைய சரீரத்தில் விட்டமின் - டி - குறைவுபட்டால் தோல் வியாதிகள் மற்றும் எலும்புகள் உறுதி இழக்கும். மொத்தத்தில் சூரிய ஒளி இல்லாமல் ஒரு மனுஷன் தனித்து உயிர் வாழ முடியாது.

அதே நேரத்தில் அதிக பட்சமான சூரிய வெப்பம், உடலுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும். தோல்களில் புற்று நோய் ஏற்படலாம்.

#### ஆவிக்குரிய பிரயோகம்

சூரியன் மற்றும் சூரிய ஒளி வசனங்களில் அடையாளமாக பயன்படுத்தப்படுகிறது." தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்." (சங் 84:11) மற்றும் "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது." (1யோவா 1:5) ஆங்கிலத்தில் "யேகோவா" என்ற வார்த்தை **YHWH** அல்லது **YaHWaH** அல்லது **YaHWeH**, அல்லது **LORD** அல்லது **GOD** என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. தமிழில் **தேவன்** என்றும் **கர்த்தர்** என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. "ஜா" (jah) மற்றும் "ஹாவா" (havah) என்ற வார்த்தைகளிலிருந்து வருவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. "ஹாவா" என்பதற்கு சுவாசம் என்றும், "ஜா" என்பதற்கு வருங்காலம் என்று பொருள் தருகிறது. ஆக, இதற்கு "தொடர்ந்து சுவாசிப்பது" அல்லது "நித்திய ஜீவன்" என்று பொருள்படுகிறது.

இந்த தெய்வீக நாமம் 6830 முறை, பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. நாம் அந்த நாமத்தை குறித்து பேசுவதைக் காட்டிலும் அதற்குள் மறைந்திருக்கும் அர்த்தத்தை மையப்படுத்த வேண்டும். ஏனெனில் "அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். "( மத் 6:7) என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

சூரியன் நமக்குள் வைட்டமின் டி-யை (Vitamin D) உருவாக்குவது போல பிதாவாகிய யேகோவா தேவன் நமக்குள் உறுதியான ஆவிக்குரிய காரியங்களை திட்டமிடுகிறார். ஆதாமின் பாவங்களுக்கு ஈடுபலியாக செலுத்துவதற்கு அனுப்பப்பட்ட அவருடைய குமாரனையும், அவரையும் இல்லாமல் வேதாகமத்தில் உள்ள அவருடைய வார்த்தையாகிய ஒளியை ஒருவராலும் புரிந்துகொள்ள முடியாது. இறுதியாக இந்த அழிவில்லா தேவனே நம்முடைய நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையாய் இருக்கிறார்.

நச்சுத்தன்மைகளை போக்கக்கூடிய எதிர்ப்பு சக்திகள் அதிகரிப்பதற்கு அதே நச்சு பொருட்களில் சிறிதளவு நம்முடைய சரீரத்தில் செலுத்தினால் அதிகதிகமான எதிர்ப்பு சக்தியை நாம் பெறுவோம். ஆனால் ஒருவர் தேவனுடைய பரிசுத்தமுள்ள வார்த்தைகளுக்கு அதிகதிகமாக தன்னை உட்படுத்திக்கொள்ள முடியுமா ? தேவனையும் அவருடைய திட்டத்தையும் நன்கு புரிந்துகொள்வதற்காக வேதம் படித்து, நித்தமும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நடைமுறை படுத்தினால் நிச்சயமாக நாம் தேவனுடைய வார்த்தைகளினால் நன்மையான பயன்களையே பெறுவோம். அதே நேரத்தில் நம்முடைய அறிவை

வளர்த்துக் கொள்வதற்காகவும் நூதன பிரியத்தினாலும் தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவைகள் நமக்கு மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. (தோல் புற்று நோயைப் போல) நாம் சத்தியத்தையும், சத்தியத்தின் மேல் வைக்கக்கூடிய அன்பை பிரித்து விட்டால் அந்த சத்தியமே விக்கிரகமாக மாறிவிடலாம். (சிலர் சத்தியத்திற்கும் விக்கிரகங்கள் செய்து விடுகிறார்கள். சத்தியத்தை கடைபிடிக்கும் பொழுது அதின் பலனை பூரணமாய் அறிந்து நடைமுறை படுத்தாத பட்சத்தில் அந்த சத்தியத்தை நாம் மதித்து அதற்கு கனத்தை செலுத்தும் பொழுது அது நம்முடைய விக்கிரகமாக மாறிவிடுகிறது.)

### சபையினால் வரும் நன்மைகள்

விசுவாசமுள்ள சபை முதலில் உதவி பெறக்கூடிய சபையாக, அடையாளமாக சொல்லப்பட்ட சூரியனிலிருந்து நன்மைகளை பெற்றுக்கொள்கிறது. அதற்குபின் கிறிஸ்துவின் ஆட்சியில் இந்த முழு உலகத்திற்கும் நன்மை செய்யும். "ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; " ( மல் 4:2) பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட கடைசி தீர்க்கதரிசனத்தில் - நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவின் செட்டையின் கீழ், சபை ஆரோக்கியம் பெறும் என்று வாக்களிக்கப்பட்டுள்ளது. சபை உயிர்த்தெழுந்து, கிறிஸ்துவின் மணவாட்டிகளாக மகிமை பெறும் பொழுது, இவர்கள் முழுமையாக குணமடைவார்கள்.

ஆயினும், கிறிஸ்துவோடு கூட இணைந்து இந்த மனுக்குலத்தை குணப்படுத்துவதற்காக சபை இப்பொழுது சூரிய ஒளியினால் ஆரோக்கியம் பெற்றுக்கொண்டிருக்கிறது. "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். " (தானி 12:3) "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். "(மத் 13:43,44) என்று இயேசுவும் இதைக் குறித்து விவரித்தார்.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய விசுவாசமுள்ள சபை தேவனுடைய சூரிய ஒளியை, சுகமாக அனுபவிப்பார்கள் என்று வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியில், சபைக்கு சூரிய வெப்பம் தேவைப்படாது. "நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. "(வெளி 21:23) இதற்கு பதிலாக இந்த பூமி முழுவதற்கும், சபை சூரிய ஒளியை பிரதிபலிக்கும். அப்பொழுது, "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள். " (வெளி 21:24)

### இன்றைக்குரிய பாடங்கள்

நாம் இந்த உலகத்திற்குரியவர்களாக இராதபோதிலும், சில நேரங்களில் அவைகளினால் நாம் பாதிப்புக்குள்ளாகிறோம். நம்முடைய சுற்றுப்புற சூழலினால் நாம் எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது "மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். "(1கொரி 15:33) ஆனால் "கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது " (மல் 3:16) ஆகவே நாம் செய்யக்கூடிய கிரியைகளினாலும், பேசக்கூடிய பேச்சுகளினாலும், நம்மை சுற்றி ஜீவிக்க கூடியவர்களின் மேல் சூரிய ஒளியை இப்பொழுதே பிரகாசிப்போம். "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். "(மத் 5:45) அநீதியுள்ளவர்களிடமும் நாம் அன்பாய் இருக்க வேண்டும் என்று கற்பிக்கப்படுகிறோம்.

"அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. " (மத் 17:2) என்று வாசிக்கிறோம். மறுரூப மலையில் மற்ற மூன்று பேர்களின் கவனமும் நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் நோக்கமாயிருந்தது. யூத யுகத்தில் நியாயப்பிரமாணத்தை கொடுத்த மோசேயின் மேலும், சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்தின எலியாவின் மேலும் அவர்கள் கவனம் செல்லவில்லை. அதே போல நாம் யேகோவா தேவன் மேல் அதிக கவனம் செலுத்தி, இயேசு கிறிஸ்துவை அசட்டை செய்துவிடக் கூடாது. ஏனெனில் பிதாவாகிய தேவன் நம்முடைய கவனத்தை குமாரன் மீது திருப்புகிறார்."அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று." (மத் 17:5) ஆகவே நம்மைக் குறித்து அல்ல, பிதாவாகிய தேவனிடத்திற்கும், ஈடுபலியை செலுத்தின நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திற்கும் மற்றவர்களின் கவனத்தை நாம் திருப்ப வேண்டும்.

அநேக ஜனங்களின் வாழ்க்கையில் சூரிய வெளிச்சம் பிரகாசிக்கிறது."வாடிக்கையாளரிடம் புன்னகையிராவிட்டால் உங்களுடையதை அவருக்கு கொடுங்கள்" என்று ஒரு கிறிஸ்தவ புத்தக கடையில், எழுதப்பட்டது போல நம்மை தொடர்பு கொள்ளக்கூடியவர்களின் வாழ்க்கையில் நாம் பெற்ற ஒளியை பிரகாசிப்போமாக.

நம்முடைய ஆவிக்குரிய திறன்களை வளர்த்தல்

# நம்முடைய புலன்களை பயிற்றுவிப்பது



பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிற படியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானோந்திரியங்களை யுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபிரெயர் 5:13,14)

**Donald Holliday**

எபிரெயர் 5-ம் அதிகாரத்தில் உள்ள இந்த வார்த்தைகள், தங்களுடைய வாய்ப்புகளை குறைவாக பயன்படுத்தும் சகோதரர்களுக்கென்று சொல்லப்பட்டது. விசுவாசத்தினால், ஜீவிக்க வேண்டும் என்ற வாழ்க்கை முறை அவர்களுக்கு கடினமாக இருந்தது. சோதனையின் காலத்தில் மிகவும் சோர்ந்து போனதினால் இவர்கள் மீண்டும் உலகத்திற்கு திரும்பினார்கள். காணக்கூடாத தரிசனத்தை மனக்கண்களில் கண்டு கொண்டிருந்த இவர்களின் கண்கள் காணக்கூடிய உலகத்தை பார்க்க துவங்கியது. வெளிப்புறமான பக்திக்குரிய வாழ்க்கை காணப்பட்டது. ஆனால், உள்ளத்திலோ அதன் வல்லமைக் குறையத் துவங்கியது. இப்படியாக ஆவிக்குரிய நலன் ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் அகப்பட்டது, குழந்தைகளின் நிலையில் வெகு நாட்களாக தங்கி, பாலான ஆகாரத்தை புசித்துக் கொண்டு ஜீவித்தார்கள். பலமான ஆகாரத்தை புசிப்பதற்கு இவர்கள் மறுத்தார்கள். இனி மேலாவது, இவர்கள் அதிகமான ஆவிக்குரிய காரியங்களில் துரிதமாக செயல்படுவதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தைகளை எழுதினார்.

நன்மை மற்றும் தீமை என்ற இரண்டு வார்த்தைகளுக்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தைகளில் ஒரு சின்ன வித்தியாசம் மட்டுமே காணப்படுகிறது. நன்மை (kalos), தீமை (kakos). இந்த இரண்டு வார்த்தைகளையும் புரிந்துக் கொள்ள கவனமாக கேட்க வேண்டும், கவனமாக பார்க்கவும் வேண்டும். குழந்தைகளாய் இருப்பவர்கள் இந்த வார்த்தைகளுக்குரிய வித்தியாசங்களை புரிந்து கொள்வதற்கு வளர்ச்சியடைந்த ஞானம் தேவைப்படுகிறது.

இந்த வார்த்தைகள் இந்நாள் வரைக்கும் தேவனுடைய ஒவ்வொரு பரிசுத்தவான்களுக்கும் ஊக்கமளிக்கிறது. இந்நாள் வரைக்கும் நாம் பெற்றிருக்கும் வளர்ச்சியின் நிலை, பரிசுத்த ஆவியும் நம்மை தேவனிடத்தில் அழைத்துச் சென்று தேவனுடைய வழிகளையும், சிந்தனைகளையும், பரிபூரணமாய் அறிந்துக் கொண்டு நம்முடைய ஆண்டவரின் அளவுக்கு வளர்ச்சியடையும் வரைக்கும் நம்மை வழிநடத்தக்கூடியதாய் இருக்கிறது. (அப் 18:26, எபே 1:23)

**நித்தியத்தை அவன் உள்ளத்தில் வைத்திருக்கிறார்**(பிரசங்கி 3:11)

நம்முடைய ஆண்டவர் நித்தியத்தை மனுஷனுடைய இருதயத்தில் வைத்திருக்கிறார். அதனால், அவனுடைய சிந்தை அதை பிரதிபலிக்கிறது, பல காரியங்களை யோசிக்கிறது மற்றும் இந்த பூமிக்குரிய தன்னுடைய வீட்டைக் குறித்து ஆராய்கிறது. ஆனால் கடந்த யுகங்களை ஒப்பிட்டு பார்க்கையில், இன்றைய தினங்களில் அறிவு மிக வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இருப்பினும் மனுஷனுடைய சிறந்த மூளை மற்றும் அறிவுக்கூர்மை - "தேவனுடைய ஆழமான நியாயத்தீர்ப்பின் காரியங்களை, மேலோட்டமாகவே பார்த்துக் கொண்டிருக்கிறது" என்று கூறப்படுகிறது. நாம், மேலான காரியங்களை நோக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். எல்லையில்லா, காலங்களும் விண்வெளியும், எல்லைக்குட்பட்ட மனுஷ சிந்தைக்கு புரிந்துக் கொள்வது மிகக் கடினம். ஆனாலும் இதுவே தேவனுடைய வழிகளின் எல்லையாயிருக்கிறது.

இப்பொழுதோ, அவருடைய மகா பராக்கிரமுமான ஒரு கிரியையை வெளிப்படுவதற்காக அதன் மேலிருக்கும் ஒரு மூடியை எடுத்துப் போடுகிறார். மகிமையின், மேகங்கள் பரலோக வீட்டிற்குரிய, அழைப்பை பெற்றவருடைய கண்களை மிகுதியாய் ஆசீர்வதித்து, புது சிருஷ்டியின் வளர்ச்சியின் வழியாய் உலக ஞானத்திற்கும் மறைத்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய - சொல்ல முடியாத சந்தோஷங்களை காண உதவி செய்கிறது. (லூக் 10:21)

**அற்புதமாய் நான் சிருஷ்டிக்கப்பட்டேன்**
(சங்கீதம் 139:14)

ஒவ்வொரு குழந்தை பிறக்கும் போதும் அதன் சுற்றுப்புற சூழலை, உணர்ந்து அதோடு இசைந்து வாழ்வதற்கான ஒரு ஆற்றலை அந்த குழந்தை அதன் புலன்கள் மூலம் பெற்றிருக்கிறது. இந்த மனித வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்வதற்கு, இந்த புலன்கள் ஒரு அற்புதமான வரமாகும். ஒரு குழந்தை வளரும் போதோ, தான் பெற்ற உணர்வுகளினால் நன்மை இன்னதென்றும், பயமுறுத்தப்படுவதினால் தீமை இன்னதென்றும் உணர்ந்து கொள்கிறது. இவைகளை சரியாக கவனிக்காவிட்டால்

குழந்தையின் உடல் நலமும் பாதிப்புக்குள்ளாக் கப்படும். பிறந்த குழந்தை காணக்கூடிய அற்புதமான காரியத்தை உணருகிறது. பூமிக்குரிய சகல காரியங்களையும் காணக்கூடிய கண்களைக் காட்டிலும் தேவனுடைய சத்தியத்தின் ஆழங்களையும் புரிந்துக் கொள்வதற்கான கண்கள் உண்மையான கண்கள் என்று நிரூபிக்கப்படுகிறது.

**அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குள்** ( lபேது 2:9)

இருட்டறையான கருப்பையிலிருந்து குழந்தை, ஒளி உள்ள உலகத்திற்குள் பிரவேசிக்கிறது. இந்த புதிய வெளிச்சம், சுற்றுச் சூழலை ஏற்றுக் கொள்வதற்கு இந்தக் குழந்தை மிகவும் தடுமாறுகிறது. பயிற்சியில்லாத அதனுடைய சிந்தனைக்கு எல்லைக்கு அப்பாற்பட்ட காரியமாக இருக்கிறது.

ஆவியின் வரங்களைப் பெற்றவர்கள், தரிசனங்களைக் காண்பவர்கள், இப்படியாக முதன் முதலில் தங்களுடைய பயணத்தை துவங்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒவ்வொரு நாளிலும் புதிதான காரியங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டு மனதிற்கு அழகாய் தோன்றும். காரியங்கள் அனைத்தும் ஞாபகக்குறியில் பதிவு செய்யப்படுகிறது. இப்படியாக, மனுஷனுடைய சிந்தை ஒரு களஞ்சிய வீடாக மாறுகிறது. இப்படிப்பட்ட அற்புதமான சத்தியங்களைக் கொண்டு தன்னுடைய குழந்தைகளின் சிந்தனையை நிரப்புவதற்கு தேவன் மகிழ்ச்சியாய் இருக்கிறார்.

**பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்** (யோவான் 16:27)

புது சிருஷ்டியின் வெவ்வேறு வளர்ச்சி நிலையை காணக்கூடிய நம்முடைய பரம பிதாவின் மகிழ்ச்சியை ஒரு குழந்தையின் வளர்ச்சியை காணக்கூடிய பெற்றோர்களாகிய நம்முடைய உணர்வுகளை கொண்டு புரிந்து கொள்ளலாம். ஒரு குழந்தை பெற்றோரை முகம் பார்த்து அடையாளம் கண்டுபிடிக்கும்,நம் கைகளை நீட்டி அழைக்கும் போது, தட்டுதடுமாறி அடி எடுத்து நம்மை நோக்கி வரும்போதும் நாம் அடையக்கூடிய பேரின்பத்தை பிதாவின் மனநிலையோடு ஒப்பிட்டு பார்க்கலாம். பெற்றோரின் இருதயம் முழுவதும் நிரம்பி இருக்கக்கூடிய இந்த அன்பை நாம் எவ்வாறு விவரிக்க முடியும் ? அதேபோல நாம் ஆவிக்குரிய உணர்வுகளினால் பிதாவின் அன்பையும், பராமரிப்பையும் அறிந்து கொள்ளலாம். நாம் ஒரு அற்புதமான குடும்பத்தின் அங்கத்தினராக இருப்பதை இப்படிப்பட்ட உணர்வுகள் நமக்கு உணர்த்திக் காட்டுகிறது.

இந்த புதிய சிந்தையின் உணர்வுகள் என்ன ? அவைகள் எவ்வாறு கிரியைகள் செய்கிறது ? இவைகளை நாம் எவ்வழிகளில் நடைமுறை படுத்த வேண்டும் ?

**நீ கர்த்தரை அறிந்து கொள்ளுவாய்** (ஓசியா 2:20)

மனித கண்களுக்கு புலப்படாதிருக்கும் தேவனுடைய அன்பான பிள்ளைகள் தாங்கள் எதற்காக தேவனால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள அதிகமாக வாஞ்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட விருப்பம் உள்ளவர்களுக்கு தேவன் பதிலளித்து பல வழிகளில் தம்மை வெளிப்படுத்தி நாம் அதை கண்டடையும் போது மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொரு தனிப்பட்ட குழந்தைகள், தேவனைப் பற்றி அறியக்கூடிய அறிவில் பலப்பட்டு வளர்வதற்கு ஞானமாக அவருடைய வழிகளை வடிவமைத்துள்ளார். ஒரு குழந்தையின் உதடுகளினால் முதல் முதலில் "அப்பா" என்ற வார்த்தை உரைக்கப்படும்பொழுது அது தன்னுடைய தந்தையை அடையாளம் கண்டு கொண்டு, அவருடைய அன்பையும், பராமரிப்பையும் தன்னுடைய பிஞ்சு உள்ளத்தில் உணர்கிறது. (ரோம 8:15)

புதிய சிந்தை வளர்ச்சியடைகிறது. ஆனால் நம்முடைய ஜீவனுக்கு காரணமாய் இருக்கக் கூடியவரைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அதிகதிகமான காரியங்கள் உண்டு என்பதையும் உணர்ந்து கொள்கிறது. இப்படியாக நம்முடைய பிதாவின் நாமத்திலுள்ள மகிமைகளை கற்றுக்கொள்ள துவங்குகிறது. ஏனெனில், ஒவ்வொரு குழந்தையும் ஒரு இளவரசனாகவும், தேவனுடைய சுதந்திரவாளியாகவும், சொல்ல முடியாத எல்லை யில்லா ஆசீர்வாதங்களுக்கும், மகிழ்ச்சிகளுக்கும் உரியவர்களாக இருக்கிறார்கள். இதற்கான ஆயத்த வேலைகளை மிக கவனமாக நடத்த வேண்டும். ஆனால் இங்கு நம்முடைய பரலோக தந்தையின் சொல்லப்படாத மகிமைகளை அறிந்து கொண்டு வாழ கற்றுக் கொண்டிருக்கிறோம். (llகொரி 3:18)

இப்படியாக அநேக காரியங்கள் இருக்கிறது. இதில் பாதியைக் கூட நம்மால் தாங்க முடியாது. நம்முடைய தெய்வீக அன்பின் அகலத்தையும் ஆழத்தையும் உணர்ந்து கொள்ளும் அளவிற்கு நம்முடைய இருதயம் விஸ்தாரமாக விரிவுபட வேண்டும். தேவனை அதிகமாக அறிந்து அவரை அதிகமாக நேசிப்பதற்காகவே, இக்காலத்து பாதையில் நாம் சகலவிதமான சோதனைகளும் அனுமதிக்கப்படுகிறது.

தேவன் தரக்கூடிய ஆவிக்குரிய உணர்வுகளை நித்தமும் பயன்படுத்தி வளர்ச்சியடையாமல் இந்த ஆசீர்வாதத்தைக் குறித்து அறிந்து கொள்ள

முடியாது. ஆயினும் காணாததும், கேட்காததுமான காரியங்களை பார்ப்பதற்கும், கேட்பதற்கும் நம்முடைய இந்த ஆவிக்குரிய நிலை வடிவமைக்கப்பட்டிருப்பதாக பவுல் கூறுகிறார். (11கொரி 12:4)

**முழுமையான நோக்கம்** (ரூத் 3:12-17)

போவாஸ் அன்றைய தினங்களில் கீழே சிந்தச் சொன்ன கோதுமை மணிகள், ரூத்தின் ஜீவனுத்திற்கு ஊன்று கோலாக இருந்தது போல, இன்றைய தினங்களிலும் நம்முடைய போவாஸ் நமக்காக பொன்னான வாய்ப்புகளையும், சத்தியங்களையும் சிந்திக் கொண்டிருக்கிறார். இப்படியாக நம்முடைய ஆண்டவரை அடையாளப்படுத்தும் ஒவ்வொரு கதாபாத்திரத்தின் வழியாக அவர் நமக்கு என்னவாக இருக்கிறார் என்றும், நாம் அவருக்கு என்னவாக இருக்கிறோம் என்றும் கற்றுக் கொள்கிறோம். இப்படியாக நட்சத்திரங்களை உருவாக்கி, அதின் அதின் பாதையில் சரியாக ஓடச் செய்து கொண்டிருக்கும், சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவன் இப்பொழுது தம்முடைய தாழ்மையான ஆட்டுக்குட்டிகளின் ஒவ்வொரு அடிகளையும் கவனித்து, பாதுகாத்து, போஷித்து, பராமரித்து பசுமையான புல்வெளியில் நடத்தி வருகிறார் என்பதை நாம் உணரலாம். விழித்திருந்து கவனிக்கக் கூடிய அவருடைய கண்கள் நம்முடைய பலவீனங்களை மட்டும் கவனிப்பதில்லை.

நம்முடைய வாழ்க்கையில் சந்திக்கும் இக்கட்டான பிரச்சனைகளில், நம்முடைய மேய்ப்பனின் அரவணைப்பை உணர்ந்து கொள்ளும் பொழுது தாவீதின் வாழ்க்கையில் நடந்த மேன்மையான சம்பவங்களை நாம் முழுமையாக உணர்ந்து கொள்ளலாம். இப்படியாக தாவீதின் நாமத்தினால் ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் நம்முடைய சொந்த கோரிக்கையாக மாற்றப்பட்டிருக்கிறது. "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்." சங் 23:1 "என்றுமே அவர் என்னுடையவர் ......... நான் அவருடையவர்" என்ற அறிக்கையை நாம் சமர்ப்பிக்கும் வரைக்கும், சோதனைகளின் வழியாக நம்முடைய குணங்கள் நிரூபிக்கப்பட்டு சமாதானத்தை கற்றுக்கொள்ளும்போது, இப்படிப்பட்ட ஆசீர்வாதமானதும், இனிமையானதுமான எண்ணங்கள் நம்முடைய ஆழ் மனதில் செயலாற்றப்பட்டு கொண்டே இருக்கும்.

**வெற்றியின் ஜெயக்கொடி** (சங் 60:4, உன்ன 2:4)

மேலும் நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளை பயன்படுத்தி செயலாற்ற இன்னும் அதிகமான சோதனைகள் தேவைப்படுகிறதென்று சில பாடங்கள் நமக்கு வலியுறுத்துகிறது. சில நேரங்களில் எதிரியான அமலேக்கியருக்கு ஒப்பிடப்படும் சந்தேகங்கள் தேவ ஜனங்களை மேற்கொண்டு, அவர்களுடைய விசுவாசத்தை பலவீனப்படுத்தி விடுகிறது. பரலோக வழிநடத்துதலுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்தின் இரகசியமான வல்லமையை பயன்படுத்தவும், செயலாற்றவும் கற்றுக்கொண்டால் மட்டுமே இப்படிப்பட்ட கொடூரமான எதிராளியிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். (யாத் 17:8-16, உபா 25:17-19, எபி 12:12,13) "கர்த்தரே எனது ஜெயக்கொடி" என்ற பெயரில் நம்பிக்கையோடு கர்த்தருக்குள் ஆரவாரித்து, பூமியின் முடிவு நாட்கள் வரைக்கும் செழிக்கலாம்.

ஆனால் இன்னும் சில கதாபாத்திரங்களை நாம் புரிந்து கொள்வதற்கு எரிகிற சூளைக்கு ஒப்பான சோதனைகளை நாம் கடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சில நேரங்களில் அவருடைய நாமத்திற்கு உடைய மகிமைகளை நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்கும் போது பரிசுத்தமான தியானம் என்னவென்பதை நாம் அறிந்து கொள்கிறோம். (யாத் 15:26, கர்த்தர் என்னை குணமாக்குகிறவர், சங் 103, கர்த்தர் என் சமாதானம், நியாயாதிபதி 6:23,24 மற்றும் பல)

போதுமான கிருபை மற்றும் ஐசுவரியமுள்ள பராமரிப்பை பெறக்கூடிய முக்கிய பகுதியான "மார்பு" அல்லது "நெஞ்சு" என்று பொருள்தரும் "ஷாடு" என்ற எபிரெய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்ட எல் - ஷடாய் என்ற பெயர். தேவ பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு இன்பமாக இருக்கிறது. (யோவ 1:18) இப்படியாக, இறுதியில் நேசிக்கப்பட்ட அன்பான குமாரனுடைய சாயலை பெறும் வரைக்கும் நாம் வளர்ச்சி அடைந்து குழந்தை பருவத்திலிருந்து நாளுக்குநாள் முதிர்ச்சி பெற வேண்டும்.

**இராஜா தம்முடைய அழகில்** (ஏசாயா 33:17)

காணக்கூடாதவரை, நாம் எவ்வாறு கண்டு நேசிப்பது ? காணாத தன்னுடைய மணவாளனாகிய ஈசாக்கை தம்முடைய இருதயத்தில் எதிர்பார்த்து வந்த ரெபேக்காளின் அற்புதமான சிந்தைக்கு இக்காரியத்தை நாம் ஒப்பிட்டு பார்க்கலாம். நாளுக்கு நாள் அவரை காணவேண்டும் என்ற வாஞ்சை அவளுக்குள் அதிகரித்தது. ஒரு நாள் அந்த அன்பின் குரல் கேட்ட போது, அவளால் அதை நிராகரிக்க முடியவில்லை. இப்படியாக அவருடைய ஆவி நம்முடைய இருதயங்களை எழுப்பும்போது, நாம் எந்த காரணத்திற்காகவும் தாமதிக்க முடியாது.

நமக்காக ஒரு குமாரன் தன்னுடைய எல்லாவற்றையும் பிதாவின் சித்தம் செய்ய தத்தம் செய்த - அந்த அளவற்ற அன்பிற்கு நம்மால் எப்படி பதில் அளிக்காமல் இருக்க முடியும் ? நமக்காக

தம்முடைய ஜீவனையும் கொடுத்தாரே. இந்த அன்பின் நிமித்தமாக நம்முடைய சகல இயல்பான விருப்பங்களையும் நாம் குறைத்துக்கொள்ள கற்றுக் கொள்ளும்போது நாம் நம்முடையவர்கள் அல்ல என்பதை அறிந்து கொள்ளலாம். மணவாட்டிக்கு உண்டான விலைக்கிரையமாக தன்னுடைய சொந்த இரத்தத்தை அந்த பரிபூரண மனுஷன் கொடுத்தார். தேவனால் அனுப்பப்பட்ட ஆவி இப்பொழுது நம்முடைய சிந்தனையின் எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட அன்பின் வகைகளை நம்முடைய சிந்தையில் ஆழமாக கற்றுக்கொண்டு நம்முடைய இருதயங்கள் நிரப்பப்படுவதற்கு அனுப்பினார்.

பாவத்தின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப்படவும் பாவத்தின் கொடூரத்திலிருந்து விடுபடுவதைக் குறித்து கனவில் கூட எதிர்பார்க்க முடியாது. மேலும் அவமானம், தாங்க முடியாத துக்கம், சிலுவை, கைகளும் கால்களும், இருதயமும் கொடூரமான முறையில் குத்தப்படுதலோடு அந்த பரிபூரண ஜீவனை கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது. ஆயினும் அன்பு மேற்க்கொண்டது. இந்த அன்புக்கு நிகர் ஒன்றுமே இல்லை.

இப்படியாக பல பாடுகள் மற்றும் மரணத்தின் வழியாக பிதாவின் சிங்காசனத்தில், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைப் பெற்று மகிமையான இடத்தைப் பெற்றுக்கொண்டார். பாவம் செய்த அனைவரும் மன்னிப்பை வேண்டி ஜீவனையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்வதற்கு, தம்முடைய சிநேகிதர்களைப் போல முன் நிற்கும்போது, சொல்ல முடியாத அளவிற்கு மகிழ்ச்சி அவர் உள்ளத்தில் நிறைந்திருக்கும். கூடுதலாக தன்னுடைய நேச குமாரன், சொல்ல முடியாத சந்தோஷங்களை நித்தியமாக பகிர்ந்து கொள்வதற்கு, பரலோகத்தின் பிதா ஒரு மணவாட்டியை பரிசாக ஆயத்தம் செய்தார். (எபே 5:27, மத் 25:21,23 லூக் 15:7,10)

**இராஜ குமாரத்தி உள்ளான பூரண மகிமையுள்ளவள்** (சங்கீதம் 45:13)

இராஜாவை சொல்ல முடியாத அழகுள்ளவராக என் கண்கள் காணும். அதே போல அவருடைய கண்கள் மணவாட்டியின் இருதயத்திற்குள் மறைந்திருக்கும் அழகை காணும். நித்தியமாக ஐக்கியப்படுவதற்கு, நீண்ட காலம் காத்திருந்து, வாஞ்சித்து சந்திக்கக்கூடிய சந்திப்புகள் நடைபெறும். **சாராளின் மரணத்தோடு இந்த உடன்படிக்கை நிறைவேறியது.**

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி எழுந்து கிறிஸ்துவோடு ஐக்கியப்படும்பொழுது பிதா தம்முடைய குமாரனோடு இணைந்து பெறக்கூடிய மகிழ்ச்சியை அளவிட முடியாது. (ஆதி 24:67) இப்படிப்பட்ட அறிவு நமக்கு ஆச்சரிய மூட்டுகிறதா ? நம்முடைய இயல்பான சிந்தை, புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு ஒரு சொப்பனத்தை போல் இருக்கிறதா ? நீண்ட பயணத்தின்போது இப்படிப்பட்ட சிந்தனைகள் ரெபேக்காளின் இருதயத்தில் தோன்றியிருந்தால், சந்தேகத்திற்கிடமின்றி காணக்கூடாத மணவாளன் கொடுத்தனுப்பிய, அன்பின் அடையாளமான பொக்கிஷங்களை அவள் பார்த்து திருப்தி அடைந்திருக்க வேண்டும். இப்படியாக அவன் தன் மணவாளன் மீது வைத்திருந்த அன்பின் பிரமாணத்தை ஒருவரும் ஒரு போதும் முறிக்க முடியவில்லை. அதுபோல இந்நேரம் வரைக்கும் அழைக்கப்பட்டவர்களின் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் அவர்கள் யாருக்கு உடையவர்களென்று உணர்ந்து, முத்தரிக்கப்பட்ட உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்கிறார்கள். (நிச்சயிக்கப்பட்டதின் அடையாளம் - எபே 1:10-17 - வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவி )

**உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது.**
(சங்கீதம் 43:1)

அநேக பாடங்கள் கவனியாமல் விடப்பட்டுள்ளது. சில நேரங்களில் வயது செல்வதினால் மட்டுமல்ல, தவறாக பயன்படுத்து வதினாலும் கண் உருண்டை வடிவத்தில் மாற்றம் ஏற்படுகிறது. பார்வையை சரி செய்வதற்கு வெளிப்புறமாக கண்ணாடிகளை பயன்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆனால் உண்மையில் கண்களின் பிரச்சனை சரி செய்யப்படுவதில்லை. ஆனாலும் கண்ணாடிகளை பயன்படுத்துவதால் நாம் சரியாக பார்வையை பெற்று விட்டோம் என்ற திருப்தியை பெறுகிறோம். இப்படியாக சரியான பார்வையைப் பெறுவதற்கு சில வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நம்முடைய ஆவிக்குரிய பார்வை ஒரு விலையேறப்பெற்ற பரிசு. பூமிக்குரிய ஆர்வமூட்டும் காரியங்களை நாம் பார்ப்பதை முடிந்த வரைக்கும் குறைப்பதன் மூலம், ஆவிக்குரிய பார்வையை சரியாகப் பெறமுடியும். கிட்டப்பார்வையை பெற்றுள்ள பரிதாபமான நிலையைக் குறித்து, பேதுரு விவரிக்கிறார். இதனால் புதுசிருஷ்டியின் ஆவிக்குரிய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. தேவனுடைய அற்புதமான விலையேறப்பெற்ற வாக்குறுதிகளில் வரக்கூடிய வல்லமையினால் மட்டுமே இவைகளிலிருந்து குணப்பட முடியும். ஒவ்வொரு வாக்குறுதியையும் பார்க்கும்பொழுது அதின் வல்லமையினாலும், அதில் வீசப்படும் வெளிச்சத்திலும் இக்காலத்து பிரச்சனைகளும், பாடுகளும் மறைந்து அல்லது கடந்து செல்லும். நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையானது

நாம் பரலோக வீட்டை சென்றடையும் வரைக்கும், தேவனுடைய சத்தியமாகிய வெளிச்சம் நமக்கு முன் வழிகாட்டியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. கலப்பையை உறுதியாக பற்றிக் கொள்ளுவோம். விசுவாசம் என்னும் நங்கூரத்தை உறுதியாக போடுவோம். எந்த விதமான காற்றும், சாத்தானின் அலைகளும் நம்முடைய சிந்தையை திசை திருப்பாமல் பார்த்துக்கொள்வோம். நாம் வாஞ்சிக்கக்கூடிய துறைமுகத்தை அடைவதற்கு, தேவையான ஆவிக்குரிய கனிகளில் வளர்ச்சி அடைவோம். இப்படிப்பட்ட நம்பிக்கையை ஆவிக்குரிய தரிசனங்களினால் எப்பொழுதும் ஆவிக்குரிய சிந்தையை நாம் போஷித்தால், தற்காலிகமான எந்த காரியங்களும் நம்மை அசைக்க முடியாது.

கரையில் இருக்கும் தன்னுடைய வீட்டில் எரிந்து கொண்டிருக்கும் விளக்கைப் பார்த்துக் கொண்டே, உற்சாகத்துடன் திரும்பும், சோர்வடைந்த மீனவனைப் பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. தன்னுடைய வீட்டிற்கு சீக்கிரமாக சேர்வதற்கு அன்போடு வரவேற்கக்கூடிய அந்த ஒரு காட்சி, அவரை ஊக்குவித்து, அவருடைய இருதயத்தை தூண்டக்கூடியதாக இருக்கிறது.

"இப்பொழுது அலைகளுக்கு பின்னால்,

எனக்காக ஒரு வெளிச்சம் பிரகாசமாக எரிந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறேன்.

நான் கரையை நெருங்க, நெருங்க எனக்காக அது மிக அதிகமாக பிரகாசிக்கிறது."

என்ற ஒரு பழைய கவிதையில் உள்ள சில வரிகள் நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையை உற்சாகப்படுத்த எழுதப்பட்டுள்ளது.

**வாழ்க்கையின் காரியங்கள்**

(நீதி 4:23, எபே 1:18)

நாம் பெற்ற மற்ற உணர்வுகளும், விலையேறப்பெற்ற பொக்கிஷங்களாக இருக்கிறது. அறிவினாலும், கிருபையினாலும் நாம் பெறக்கூடிய சமநிலையான உணர்வுகளை சரியான முறையில் செயல்படுத்தி, தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கைக்காக, ஒரு கால் மட்டுமே தன்னை அர்ப்பணித்தால், அவருடைய வாழ்க்கை எவ்வாறு தொடரும் ? இப்படிப்பட்ட காரியங்கள் தேவனை விட்டும், அவரால் கொடுக்கப்படும் சத்தியங்களை பகிர்ந்து கொண்டு, பிதாவின் நாமத்தை நாம் தரித்துக்கொள்வதற்கு அவர் நம்மை ஆயத்தப்படுத்துவதிலிருந்து நம்மை விலக்கிவிடும். (வெளி 14:1)

நம்முடைய அன்பான தந்தை ஒவ்வொரு பிள்ளைகளோடும், நெருக்கமான, தம்முடைய விலையேறப்பெற்ற முக்கியமான காரியங்களை பகிர்ந்துகொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவராக இருக்கிறார். இந்த செய்திகளில் கொழுந்துவிட்டு எரியக்கூடிய வெளிச்சத்தில், அவரை நேசிப்பவர்கள் தங்களுடைய பாதையை எளிதில் அறிந்துகொள்கிறார்கள். சோர்வடைந்த யாக்கோபு இருளான வனாந்தரத்தில் நித்திரை செய்கையில், தேவன் அந்த ஸ்தலத்தில் இருப்பதாக தரிசனம் கண்டார்.

இப்பொழுது பக்கங்களை திருப்பலாம் -சுற்றி நிற்கும் இராணுவத்தையும், குதிரைகளையும், இரதங்களையும் கண்ட வேலைக்காரன் பயமடைந்த " ஐயோ, என் ஆண்டவனே, என்னசெய்வோம் என்றான். அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான்.... கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்;" (11இரா 6:15-17) அவன் அக்கினி மயமான குதிரைகளாலும் , இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதைக் கண்டு தைரியமானான். தேவனுடைய பிள்ளைகள் இப்படியாக ஒவ்வொரு பக்கங்களை திருப்பி, தேவனுடைய அன்பான பராமரிப்பையும், பாதுகாப்பையும் கற்றுக்கொள்கிறார்கள்.

சில உணர்வுகள் நம்மை எச்சரிக்கிறது, சில உணர்வுகள் நம்மை மகிழ்விக்கிறது, வெவ்வேறு கோணங்களில் நம்முடைய சோதனைகளை, தேவனுடைய வெளிச்சத்தில் கண்ணோக்க சில உணர்வுகள் நம்மை வழிநடத்துகிறது. நன்கு பயிற்சி பெற்ற தேவ பிள்ளைகள், அவர்களுடைய பாதையில் நிழல் சாய்ந்தாலும், அதன் மேல் தேவனுடைய நிழல் இருப்பதை உணருவார்கள். (சங் 91:1, உன்ன 2:3,4) நம்முடைய சோதனையின்போது நாம் பெறக்கூடிய நம்முடைய ஆண்டவரின் ஒரு சின்ன புன்னகை - "நல்லது" என்று அவர் மெலிதாக சொல்லக்கூடிய வார்த்தையை உணர்த்துகிறது.

இவைகள் தேவனை எட்டிப் பிடிக்கக்கூடிய இருதயத்தின் உணர்வுகளும், ஆவிக்குரிய பார்வையும், கேட்கும் திறனும், அன்பும், பராமரிப்புமாம். எவ்வளவு மாம்சீக பலவீனங்கள் நம்மை ஆட்கொண்டாலும், மேற்கூறப்பட்டுள்ள உணர்வுகள், சரியாக செயலாற்றப்படும்போது, நாம் ஆவிக்குரிய காரியங்களில் சோர்ந்துபோவதில்லை. ஆசீர்வதிக்கப்பட்ட வெளிச்சத்தைப் பார்த்து திருப்தி அடையக்கூடிய நம்முடைய கண்கள் மங்கிபோவதுமில்லை, நாம் அந்த பரிபூரண நாளை கிட்டிச்சேரும் வரைக்கும் நம்முடைய வெளிச்சமான பாதை நாளுக்கு நாள் பிரகாசிப்பதற்கு, நம்முடைய ஒவ்வொரு உணர்வுகளும் ஆசீர்வதிக்கப்பட்டவைகளாக இருக்கிறது. (உபா 34:7, ஏசா 40 :31)

தீர்க்கதரிசனத்தில் இன்று

# இஸ்ரயேலின் வளர்ச்சி

" ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்." ஏசாயா 11:12

பியூ ஆராய்ச்சியாளர் நடத்திய ஆய்வு ஒன்றில், பிற மத அமைப்புகளை காட்டிலும் யூதர்கள் முன்பும் இப்பொழுதும் இங்கும், அங்கும் இடம் மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஒன்றிக்கு நான்கு பேர் என்கிற விகிதத்தில் யூதர்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கிற்கு மாறி கொண்டு இருக்கிறார்கள். மற்றவர்களுடன் ஒப்பிட்டு பார்கையில் கிறிஸ்தவர்கள் 5 சதவீதத்தினரும் இஸ்லாமியர்கள் 4 சதவீதத்தினர் மட்டுமே. தங்கள் நாட்டை விட்டு வெளி ஏறினவர்கள். பியூ நபாரம் என்ற அமைப்பு, மதம் மற்றும் பொது வாழ்க்கை என்ற தலைப்பில் வெளியிட்ட பத்திரிக்கையில் உலகில் 214 மில்லியன் இடம் பெயர்பவர்களை பயணத்தைப் பற்றி ஆராய்ந்ததில் வெளி வந்த செய்தி தான் மேல கூறப்பட்ட செய்திகள்.

பிரான்டீஸ் பல்கலைக்கழகத்தை சார்ந்த பேராசிரியர் ஜோனத்தான் சார்ன்னா கூறும் போது -"உலகின் யூத சமுதாயம் ஒன்று சேர்கிறது" என்றம் "யூதர்கள் இன்று அவர்களை துன்புறுத்திய மூன்றாம் உலக நாடுகளை எல்லாம் புறக்கணித்துவிட்டு, சுதந்திரமான முதல் உலக நாடுகளை நோக்கி பயணத்தை மேற்கொள்கின்றனர்.

மூத்த ஆராய்ச்சியாளரான பிலிப்பு கானர் தனது ஆராய்வின் பலனாக கூறுகையில் "வேறு எந்த மத சமுதாயமும், யூதமதத்தைப் போல் 25 % இடம் மாற்றம் செய்யவில்லை" என்று கூறுகிறார். உலக ஜனத்தொகையில் சராசரியாக 3% ஜனங்கள் மட்டுமே இடம் மாற்றம் செய்கின்றனர். உலகம் முழுவதும் வாழும் 13.3 மில்லியன் யூத ஜனங்கள் பெரும்பாலானோர் உலகின் இரண்டு நாட்டில் தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். 43% இஸ்ரயேல் நாட்டிலும் 39% அமெரிக்காவிலும் வாழ்கின்றனர். 1989 யில் ரஷ்யா பிளவு ஏற்பட்டு வீழ்ந்ததாலும் 1948ல் இஸ்ரயேல் உருவானதாலும், இஸ்ரயேல் மட்டும் அமெரிக்காவிலும் இவ்வளவு பெரிய அளவிலான இடமாற்றம் நிகழ்ந்தது.

**இஸ்ரயேலின் தனித்தன்மை**

மனிதனின் கண்ணோட்டத்தில், இஸ்ரயேலின் இந்த மிக விரைவான வளர்ச்சி வளர்ந்த நாடுகளுக்கு ஒரு அதிகமாய் திகழ்கிறது. 1948 இஸ்ரயேல் நாடு உருவான பின்பு அங்கு உள்ள ஜனத்தொகை 10 மடங்காக உயர்ந்துள்ளது. அந்த நாடு உருவான பின்பு 130 நாட்டிலிருந்து யூத ஜனங்கள் இஸ்ரயேலை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று இஸ்ரயேல் நாடு மிக அடர்த்தியான நாடாக திகழ்ந்தாலும், இன்றும் பெரிய மாநிலங்கள் கூட மேலிதான ஜனத்தொகையோடு விளங்குகிறது. பிற நாடுகளை ஒப்பிட்டு பார்கையில், இஸ்ரயேல் நாட்டில் ஜனத்தொகை இன்னும் இளமையாகவே உள்ளது. (median eye 28.3 years )அவர்கள் பிறந்த குழந்தையின் இறப்பு விகிதம் மிக குறைவு (1000 பிறப்பிற்கு 5.8 குழந்தைகள் இறக்கிறார்கள்) சராசரியாக உயிர் வாழும் நாட்களின் விகிதம் மிகவும் உயர்ந்தாய் உள்ளது. (78.7 வருடம்)

இஸ்ரயேலின் ஜனத்தொகை வளர்ச்சி ஒரே சீராக இருக்கவில்லை. அலியாவின நான்கு அலைகளினால் தான் இந்த வளர்ச்சி நடைபெற்றது ( இஸ்ரயேலை நோக்கி வெளியேறின யூதமக்களை குறிக்கும் எபிரெய வார்த்தை- அலியா) முதல் முதலில் அந்த நாடு கண்டுபிடிக்கப்பட்டது. 1948 முதல் 1951 வரை இஸ்ரயேல் 700,00 குடியேறியவர்களை ஏற்றுக்கொண்டது. இதனால் அவர்களின் ஜனத்தொகை இரண்டு மடங்கானது. இரண்டாவதாக 1950 நெஸ்ட்டு என்பவர் தேர்ந்தெடுத்த திரும்பி வருதல் என்ற சட்டத்தின் படி யூத மக்கள் இஸ்ரயேல் தேசத்திற்கு திரும்பி வந்தது சட்ட ரீதியாக்கப்பட்டது. இந்த சட்டத்தின் மூலம் யூத மக்கள் எல்லோரும் இஸ்ரயேல் நாட்டில் குடிப்பெயர எல்லா உரிமையும் உள்ளது என்றும் குடிபுகுந்தபின் அவர்கள் இஸ்ரயேலின் குடிமகன் ஆகும் உரிமையும் கிடைத்தது. மேலும் 1970 ஏற்படுத்தப் பட்ட சட்டத்தின்படி (Israel ministry of affairs 2001) ஒரு யூதனின் பிள்ளையோ அல்லது பேரப்பிள்ளையோ, ஒரு யூதனின் கணவன் அல்லது மனைவியோ மேலும் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் கணவனோ மனைவியோ அவர்கள் யூதர் அல்லாதவர்

ஆனாலும் அவர்களும் இஸ்ரயேலில் குடிப்பெயர்ந்த பின் இஸ்ரயேலின் குடிமகன் என்ற உரிமையை பெறுவார்கள். 1950ல் இந்த சட்டம் இயற்றப்பட்டபின் தான் இஸ்ரயேலில் மிகப் பெரிய அளவிலான ஜனத்தொகை வளர்ச்சி இருந்தது. 170,000 யூதர்கள் வட ஆப்ரிக்கா மற்றும் ரூமேனியாவிலிருந்து இஸ்ரயேலில் குடியேறினர். 1960 ல் மூன்றாம் அலை நிகழ்ந்த போது சுமார் 180,000 யூதர்கள் வட ஆப்பிரிக்காவிலிருந்து வந்தனர். இறுதியாக, 1990ல் ரஷ்யா வீழ்ந்த போது சுமார் 900,000 பேர் முன்னால் வந்தனர். மேலும் 60,000 பேர், உலகம் இதுவரை கண்டிராத வகையில் எத்தியோப்பியாவிலிருந்து இஸ்ரயேலில் குடியேறினர். 1948 முதல் 2007 வரை மொத்தம் 3 மில்லியன் யூதர்கள் இஸ்ரயேல் குடிப்பெயர்ந்தனர். அதில் மூன்றில் இரண்டு பங்கினர் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்து வந்தனர்.

2007 இஸ்ரயேலில் நடந்துக் கொண்டிருந்த குடிபெயர்தல் 20%மாக குறைந்தது. Woodrow Wilson International center for scholars என்னும் சமூகம் நடத்திய ஆய்வில், மதிய கிழக்கு நாடுகளில் பாதுகாப்பு குறைந்த கொண்டிருந்தாலும் அரேபியர் மற்றும் இஸ்ரயேலுக்கு இடையே நடக்கும் முரண்பாட்டாலும் இந்த குடிப்பெயர்த்தல் குறைந்து விட்டதாக கருதுகிறார்கள். 2008ல் நிகழ்ந்த பொருளாதார நெருக்கடியினாலும் அரேபியர்களாலும் இந்த குடிபெயர்த்தல் குறைந்து விட்டது.

2008ல், 6400 யூதர்கள் அரேபிய நாடுகளில் வாழ்வதாகவும், 32,000 யூதர்கள் அரேபியர் அல்லாது இஸ்லாமிய நாடுகளில் வாழ்வதாக கூறப்படுகிறது. மார்ச் 2008 ஆம் ஆண்டு யூதர்கள் அரேபிய நாடுகளில் அனுப்பவிக்கும் நெருக்கடியால் தான் அவர்கள் கட்டாயமாக குடிபெயர்கிறார்கள் என்ற சுற்றறிக்கை ஐக்கிய நாடுகளை சேர்ந்த மனித உரிமை சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. 2009 அரேபியரின் தாக்குதல் துரிதமான உடன், பல விதமான சிறப்பு ஏற்பாடுகளுடன் கிளர்ச்சி மிகுந்த பல அரேபிய ஆட்சிக்கு உட்பட்ட இடங்களிலிருந்து பல யூதர்கள் வெளியேற்றினர்.

2009 பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பொழுது, வட அமெரிக்காவிலிருந்து குடிபெயர்ந்த மக்களின் 10 சதவீதமாயும் கனடாவிலிருந்து குடிபெயர்ந்தவர்களின் விகிதம் 6% மாகவும் உயர்ந்தது. வட அமெரிக்காவின் Jewish Agency's Aliya delegation யினின் தலைவரான லீரான் அவிசார் -"நாங்கள் இவ்வாறு அழகாக எல்லா மக்களையும் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிப்பதை நினைத்து மிகவும் பெருமை கொள்கிறோம்." என்று கூறுகிறார். "பொருளாதார நெருக்கடி காரணமாய் எல்லாம் மக்களும் குடிபெயர்வதற்கு இதுதான் சரியான நேரம் என்று நினைக்கிறார்கள், "என்றும் கூறுகிறார்.

**தீர்க்கதரிசனம் நிறைவேறுதல்**

வேதத்தின் கண்ணோட்டத்துடன் பார்க்கையில் இஸ்ரயேல் தற்செயலாக மீண்டும் பிறக்கவில்லை. இஸ்ரயேலும் குடிப்பெயர்ந்ததும் தற்செயலாய் நிகழ்ந்தது அல்ல. 1874 முதல் உலகில் நடந்த பல நிகழ்ச்சியின் காரணமாய் இஸ்ரயேல் மீண்டும் பழைய நிலைமைக்கு வர பல செயல் முறைகள் நிகழ்ந்தன.

* 1878 -பாலஸ்தீன நாட்டை சொந்தமாக்கி கொள்ளும் உரிமை இஸ்ரயேலுக்கு அளிக்கப்பட்டது.

* முதல் உலகப் போரின் போது பார்ஙபரின் அறிக்கையின் மூலம் பாலஸ்தீன யூதர்களின் தாய்நாடாக அறிவிக்கப்பட்டது.

* 1930 பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டதால் யூதர்களுக்க தன் தாய் நாடு தவிர வேறு எந்த இடமும் கவர்ச்சியாக தோன்றவில்லை.

*இரண்டாம் உலகப் போரின் போது, ஹிட்லர் யூதர்களை வேட்டையாடியதின் பொருட்டு பல யூதர்கள் மத்திய ஐரோப்பிய நாடுகளை விட்டு விட்டு இஸ்ரயேலுக்கு ஓடினர்.

*கிழக்கிற்கும் மேற்கிற்கும் முரண்பாடு காரணமாய் 1,000, 000 யூதர்கள் ரஷ்யாவிலிருந்து இஸ்ரயேல் நாட்டிற்கு திரும்பினர்.

* 2007ல் மேற்கத்திய நாடுகளில் மிக கடினான பொருளாதார நெருக்கடி நிகழ்ந்த பொழுது, அமெரிக்காவில் வாழ்ந்த யூதர்கள் பலர் இஸ்ரயேலுக்கு திரும்பினர்.

"ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல்,இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 16:14,15)

எல்லோரும் தெரிந்த வரை, விடுதலை பயணத்திற்குபின் யூதர்கள் யாரும் எகிப்தில் இருந்ததாக தெரிய வில்லை. இரண்டு மில்லியன் மக்கள் அந்த நாட்டை விட்டு வெளியேறினர். ஆபிரகாமும் வாக்களிக்கப்பட்ட அந்த நாட்டிற்கு இன்னும் இரண்டு மடங்கான மக்கள் குடிப்பெயர்வதை இன்று நாம் அனைவரும் கண்ணோக்கி கொண்டிருக்கிறோம்.

பூமிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது, ஆபிரகாமின் வம்சத்திற்கு வாக்களிக்கப்பட்டதை கொடுப்பதே முதல் படியாகும். "நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களைச் சகலதேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டுவருவேன். அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; .... உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, ....உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன். உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருந்து," (எசேக் 36:24-28) முதலில் ஜனங்கள் தேசத்திற்கு திரும்பி, அதை சுதந்தரித்துகொள்வார்கள் இறுதியாக, அவர்களின் இருதயம் மீட்கப்படும்.

இஸ்ரயேல் இன்று ஒரு மதசார்பான தேசம் அல்ல. ஆயினும், அங்கு தேவனின் செல்வாக்கு இருப்பதை உணர முடிகிறது. எல்லா இடங்களிலும் வேத வார்த்தைகள் காணமுடிகிறது. ஓய்வு நாட்கள் அனுசரிக்கப்படுகிறது. வேதாகமம் வெளிப்படையாக பேசப்படுகிறது. தேவனை நம்பாத நாடுகளிலிருந்து குடியேறின ஜனங்களும், தேவனைப் பற்றியும் வேதாகமத்தை பற்றியும் முதல் முறையாக வெளிப்படுத்தப் படுகிறது.

ஏசாயாவில் வாக்களித்தபடி, இஸ்ரயேல் தேவனிடமாக மனந்திரும்பும் போது, அவர்கள் மூலமாக புறஜாதிகளின் தேசத்தை தேவன் ஆசீர்வதிப்பார். "அவர் உன்னை மகிமைப்படுத்தினார் என்று உன் பிள்ளைகளையும், அவர்களோடேகூட அவர்கள் பொன்னையும், அவர்கள் வெள்ளியையும் உன் தேவனாகிய கர்த்தரின் நாமத்துக்கென்றும், இஸ்ரவேலின் பரிசுத்தருக்கென்றும், தூரத்திலிருந்துகொண்டுவர, தர்ஷீசின் கப்பல்களும் ஏற்கனவே எனக்குக் காத்திருக்கும். அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்; என் கடுங்கோபத்தினால் உன்னை அடித்தேன்; ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன். உன்னிடத்துக்கு ஜாதிகளின் பலத்த சேனையைக் கொண்டுவரும் படிக்கும், அவர்களுடைய ராஜாக்களை அழைத்துவரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும்பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்" (ஏசாயா 60 : 9-11)

"நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆதி 22 :18) என்று விசுவாசமுள்ள ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் அப்பொழுது நிறைவேறும்.

**சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,**

**திருச்சி.**

**Cell : 9244611241, 8122224919**